

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 88 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 20 – திங்கள்கிழமை 06 நவம்பர் 2023 – மதுரை 8 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:82 - Issue 88: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 20 - Monday 06 November 2023 - Madurai 8 Pages ₹ 5.00


### கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பில் கழகத்தினர் தீவிரம்!

## சிறப்பு முகாம்கள் அமைத்து களப்பணி மேற்கொண்டனர்!

சென்னை, நவ. 6-

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் களப் பணியில் கழகத்தினர் தீவிரமாக நேற்று ஈடுபட்டனர்.**

**தேர்தல் ஆணையத்தால் நடைபெற்ற சிறப்பு முகாம்களில் பொதுமக்களுக்கு வழிகாட்டும் வகையில் ஆங்காங்கே கழகத்தினர் முகாம் அமைத்து அவர்களுக்கு ஏற்படும் ஐயப்பாடுகளை நிவர்த்தி செய்தது மட்டுமின்றி, புதியதாக 18 வயது கொண்ட இளைஞர்களை வாக்காளர் பட்டியலில் பெயர் இணைத்திடும் பணியினை மேற்கொண்டனர்.**

இதுபற்றிய விவரம் வருமாறு:-

இந்தியத் தேர்தல் ஆணையம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் வாக்காளர் பட்டியல் புதியதாக தயாரிப்பது வழக்கமான நடைமுறையாகும். அந்த வகையில் இந்த ஆண்டும், இந்தியத் தேர்தல் ஆணையம் வருகிற 2024 ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு 18வயது நிறைவடையும் இளைஞர்கள் தங்களது பெயரை சேர்த்திடலாம் என்றும் அறிவித்தது.

மேலும் முகவரி மாற்றம், பெயர் திருத்தம், வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்கம் உள்ளிட்ட திருத்தங்களையும் மேற்கொள்ளலாம் என்றும் இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்து இருந்தது.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு அரசு - தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் புதியதாக தயாரித்திட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

**தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளுடன் தேர்தல் அதிகாரி ஆலோசனை!**

அதன்படி விரைவு வாக்காளர் பட்டியல் வெயிடுவதற்கு முன்பு தமிழ்நாடு



அரசின் தேர்தல் அதிகாரி சத்ய பிரதா சாகு, தி.மு.க. உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

இதனையடுத்து வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் களப் பணியில் மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட வேண்டுமாய் தலைமைக் கழகம் சார்பில் கடந்த 30.9.2023 அன்று ஒரு அறிவிப்பினை வெளியிட்டது. இந்நிலையில்தான் தமிழ்நாடு தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று விரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டது.

**கழகத் தலைவரின் கடிதம்!**

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 2.11.2023 அன்று “களம் காணட்டும் கழகப் படை” என்ற தலைப்பில் ‘உங்களில் ஒருவன்’ கழகத்தினருக்கு எழுதிய கடிதத்தில்,

**“வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியினைத் தேர்தல் ஆணையம் மேற்கொள்ளும் நாட்களில் நம்முடைய கழகத்தினர் கண்ணும் கருத்துமாக இருந்து, யார் யார் உண்மையான வாக்காளர்கள், யார் யார் போலியானவர்கள், இறந்து போனவர்கள் எத்தனை பேர் இடம் மாறியவர்கள், எத்தனை பேர், இரண்டு இடங்களில் பெயர் கொடுத்திருப்போர் யார் என்பது உள்ளிட்டவற்றைக் கவனித்திட வேண்டும்”** - என்று குறிப்பிட்டு இருந்தார்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலையடுத்து மாவட்டச் செயலாளர்கள், மாநகரச் செயலாளர்கள், பகுதிக் கழக, வட்டக் கழக, கிளை கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் களப் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

**68 ஆயிரம் சிறப்பு மையங்கள்!**

குறிப்பாக நேற்று முன்தினமும், நேற்றும் (4, 5.11.2023 - சனி, ஞாயிறு) தமிழ்நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள்

> **“ தேர்தல் கமிஷன் அமைக்கப்பட்டுள்ள பூத்களுக்கு அருகில் கழகத்தினர் டேபிள் அமைத்து அதில் கழகக் கொடியை வைத்து பொதுமக்களுக்கு குறிப்பாக புதிய வாக்காளர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்து உதவி புரிந்தனர். ”**

பெயர் சேர்ப்பு, திருத்தம், நீக்கம் உள்ளிட்ட பணிகளுக்காக சிறப்பு முகாம்கள் நடைபெற்றன. சுமார் 68,000 வாக்குச்சாவடி மையங்களில் 2வது நாளாக நேற்றும் சிறப்பு முகாம்கள் நடைபெற்றன. விடுமுறை தினம் என்பதால் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு, நீக்கம், திருத்தம் போன்ற பணிகளுக்காக ஏராளமானோர் விண்ணப்பங்களை அளித்தனர்.

இதில் 1.1.2024க்குள் புதியதாக 18 வயது நிறைவடைந்தவர்கள் புதியதாக தங்கள் பெயர்களை வாக்காளர்



பட்டியலில் சேர்த்திட முனைப்புடன் ஈடுபட்டனர்.

இம்முகாம்களில் இறந்தவர்களின் பெயர்களை நீக்குதல், முகவரி மாற்றம், பெயர் திருத்தம் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**வாக்காளர் பட்டியல் பூத் அமைப்பு!**

தேர்தல் கமிஷன் அமைக்கப்பட்டுள்ள பூத்களுக்கு அருகில் கழகத்தினர் டேபிள் அமைத்து அதில் கழகக் கொடியை வைத்து பொது மக்களுக்கு குறிப்பாக புதிய வாக்காளர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்து உதவி புரிந்தனர்.

**புதிய வாக்காளர்களை சேர்த்தனர்!**

அதனடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ந்தேதி தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்கள் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை கழகத்தினர் மேற்கொண்டனர்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம் செய்ய, திருத்தங்கள் செய்ய, இடமாற்றம் செய்ய, அல்லது ஆதார் எண்ணை இணைக்க தகுதியுள்ள குடிமக்களுக்கு படிவங்கள் 6, 6பி, 7, 8 ஆகியவற்றைப் பூர்த்தி செய்து வாக்குச் சாவடி நிலை அலுவலரிடம் மற்றும் வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளித்திட பொதுமக்களுக்கு கழகத்தினர் உதவி புரிந்தனர்.

**மேலும் இரு முகாம்கள்!**

கடந்த இரு தினங்கள் (4, 5.11.2023) நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சேர்த்தல், நீக்கல் குறித்த சிறப்பு முகாம்கள் போல் வருகிற 18.11.2023 - மற்றும் 19.11.2023 ஆகிய சனி ஞாயிற்றுக்கிழமைகளிலும் மேலும் இரு சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கின்றன. இதிலும் புதிய வாக்காளர் பெயர் சேர்த்திட, நீக்கிட என்னும் களப் பணியில் ஈடுபட கழகத்தினர் தங்களை தயார்படுத்திக் கொண்டுள்ளனர்.

அதுமட்டுமின்றி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம் செய்ய www.nvsp.in என்ற இணைய தளம் மூலமாகவும் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### தொடர் மழை காரணமாக

# தமிழ்நாட்டில் அணைகள் நிரம்புகின்றன!

## விவசாயிகள் மகிழ்ச்சி

சென்னை, நவ.6-

தொடர் கனமழை காரணமாக தமிழ்நாட்டில் உள்ள அணைகள், நீர்நிலைகள் வேகமாக நிரம்புவதால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளதால், தமிழ்நாடு முழுவதும் பரவலாக கடந்த சில நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. குறிப்பாக, நெல்லை, கன்னியாகுமரி, தேனி, நீலகிரி, கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை கொட்டி தீர்த்து வருகிறது. இதனால் அந்த மாவட்டங்களில் உள்ள அணைகள், மற்றும் நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே உள்ள வைகை அணையின் நீர்மட்டம், தொடர் கனமழை காரணமாக அதிகரித்தபடி இருந்தது. இந்நிலையில் இன்று மொத்தமுள்ள 71 அடியில் நீர்மட்டம் 66 அடியை தாண்டியது.

இதனால் பாதுகாப்பு கருதி தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களுக்கு முதல் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

**வெள்ள அபாய எச்சரிக்கை!**

இதேபோல் பெரிய குளம் அருகேவுள்ள சோத்துப்பாறை அணை நிரம்பி வழிவதால் வராக நதி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து வராக நதி கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நீர் பிடிப்பு பகுதியில் கடந்த 2 நாட்களாக தொடர்ந்து பெய்த கனமழைக் காரணமாக கம்பம் அருகேவுள்ள சுருளி அருவியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி சுருளி அருவியில் குளிப்பதற்கு வனத்துறை தடை விதித்துள்ளது.

இதேபோல் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த தொடர் கனமழை காரணமாக பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு அணைகளின் நீர் மட்டம் உச்ச அளவை எட்டியுள்ளது. இதனால் தாமிரபரணி, கோதையாறு, பரளி ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

---

### ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக, தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள வழக்குகள்

# நவ.10-ஆம் தேதி விசாரணைக்கு வர வாய்ப்பு!

## உச்சநீதிமன்றம் அறிவிப்பு!

புதுடெல்லி, நவ.6-

ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக, தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள வழக்குகள் வரும் 10-ஆம் தேதி விசாரணைக்கு வர வாய்ப்புள்ளதாக உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

நிலுவையில் உள்ள மசோதாக்களுக்கு காலதாமதமின்றி ஒப்புதல் வழங்கக் கோரியும், அரசு நடவடிக்



கைகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் வேண்டுமென்றே ஆளுநர் ஆர்.என்.ரவி காலதாமதம் செய்வதற்கு எதிராகவும், தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் கடந்த 31-ஆம் தேதி மனுத் தாக்கல் செய்தது.

அதன் பின்னர், அரசு நியமித்த தேர்வுக்குழுக்களின் பரிந்துரைகளின்படி பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை நியமிக்காமல், ஆளுநர் புதிய தேர்வுக் குழுவை அமைத்துள்ளதற்கு எதிராக மற்றொரு வழக்கை கடந்த 2-ஆம் தேதி, தமிழ்நாடு அரசு தாக்கல் செய்தது.

இந்நிலையில், ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக, தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள இந்த வழக்குகள் வரும் 10-ஆம் தேதி விசாரணைக்கு வர வாய்ப்புள்ளதாக உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 06-11-2023

# மக்கள் ஏன் தெரிந்து கொள்ளக் கூடாது?

**“எங்களுக்கு யார் நன்கொடைகள் வழங்கியது என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை” - என்ற ‘ஊழல் மலிந்த’ பதிலை ஒன்றிய பா.ஜ.க. அரசு உச்சநீதிமன்றத்தில் சொல்லி இருக்கிறது. இதுதான் பா.ஜ.க. அரசின் உண்மைத் தன்மை ஆகும்.**

தேர்தல் பத்திரங்களுக்கு எதிரான வழக்கு விசாரணை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி எஸ்.ஏ. சந்திரசூட் தலைமையிலான 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு முன் நடைபெற்றது.

வழக்கறிஞர் கபில் சிபல் உள்ளிட்டோர், தேர்தல் பத்திரம் மூலம் நன்கொடை பெறும் அரசியல் கட்சிகள் அதனை தேர்தலுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற விதிமுறை இல்லை என்றும், அதனை எதற்கு வேண்டுமானாலும் செலவு செய்யும் நிலை உள்ளதாக தெரிவித்தனர். தேர்தல் பத்திர முறையை முழுமையாக ரத்துசெய்ய வேண்டும் என்று அவர்கள் வாதிட்டனர்.

ஒன்றிய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா அப்போது என்ன சொன்னார் தெரியுமா?

**“நன்கொடை யார் வழங்கியுள்ளனர் என்பது அதனைப் பெறும் கட்சிக்கு மட்டுமே தெரியும். மற்ற கட்சிகளுக்கு தெரியாமல் ரகசியம் காப்பதுதான் இந்த திட்டம்” என்று குறிப்பிட்டார். அப்போது, குறுக்கிட்ட தலைமை நீதிபதி எஸ்.ஏ.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, “அப்படியானால் வாக்காளர்களின் உரிமை என்ன? ஏன் நன்கொடை விபரங்களை வாக்காளர்கள் தெரிந்துகொள்ளக் கூடாது?” என்று கேள்வி எழுப்பினர்.**

**தேர்தல் ஆணைய வழக்கறிஞரிடமும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் பல்வேறு கேள்விகளை எழுப்பினார்கள்.” தேர்தல் பத்திர நடைமுறையால் பாதிப்பு எதுவும் உள்ளதா? அது குறித்து ஆய்வுகள் எதுவும் நடத்தப்பட்டதா? இதுவரை பெறப்பட்டுள்ள நன்கொடை தொகை எவ்வளவு? என்பது உள்பட பல கேள்விகளுக்கு தேர்தல் ஆணையம் உரிய பதிலை அளிக்கவில்லை” என நீதிபதிகள் தெரிவித்தனர்.**

ஒன்றிய அரசின் அட்டார்னி ஜெனரல் வாதிடும் போது, “பொது மக்கள் எதை வேண்டுமானாலும் எதைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் நிலை இருக்கக் கூடாது. நியாயமான கட்டுப்பாடுகள் தேவை” என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

**“சில நிறுவனங்கள் மொத்த வருவாயையும் அரசியல் நன்கொடையாக வழங்குவதை அனுமதிப்பது ஏன்? முன்பு நிகர லாபத்தில் ஒருபகுதிதான் நன்கொடையாக வழங்க முடியும் என்ற விதிமுறை இருந்தது. தற்போது லாபம் இல்லாத நிறுவனங்கள் கூட மொத்த வருவாயையும் நன்கொடையாக வழங்க முடியும் என்று மாற்றப்பட்டுள்ளது. நிறுவனம் நடத்துவது நன்கொடை வழங்குவதற்காக அல்ல. இதனை சரிசெய்ய நிறுவனங்கள் சட்டத்தில் திருத்தம் தேவை. இதுபோன்ற பிரச்சினைகளை சரிசெய்ய ஒரு சமநிலையான நன்கொடை திட்டத்தை உருவாக்கலாம். அது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை அரசும், நாடாளுமன்றமும்தான் முடிவு செய்ய வேண்டும்” என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர்.**

இதனைத் தொடர்ந்து, கடந்த செப்டம்பர் 30 ஆம் தேதி வரை வரையிலான நன்கொடை மொத்த விபரங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் அரசியல் கட்சிகள் தாக்கல் செய்த விபரங்கள் முழுமையாக இல்லை என்றால் இந்திய ஸ்டேட் வங்கியிட மிருந்து தகவல்களைப் பெற்று 2 வாரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் கூறினர்.

அரசியல் கட்சிகள் தேர்தல் செலவுகளுக்கான நன்கொடைகள் பெறுவதற்கு தேர்தல் பத்திர விற்பனையை ஒன்றிய பா.ஜ.க. அரசு 2018 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தியது. கார்ப்பரேட் நிறுவனங்கள் தங்கள் அடையாளத்தை மறைத்து நன்கொடை வழங்க இது ஊக்கப்படுத்துவதாக உள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டது. இதனை எதிர்த்து சில அமைப்புகள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது. ஒரு குடிமகனுக்கு இருக்கும் தெரிந்து கொள்ளும் உரிமையை மீறுவதாக இது உள்ளது என்கின்றன இந்த மனுக்கள்.

**2016 முதல் 2022 வரையிலான ஆண்டுகளில் பா.ஜ.க. மட்டும் ரூ.5,272 கோடி நன்கொடை பெற்றுள்ளது. இது மொத்த நிதியில் 58 சதவிகிதம் ஆகும். ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் என்ற அமைப்பு இதனை ஆய்வு செய்து அறிக்கை அளித்துள்ளது. பா.ஜ.க. பெற்றுள்ள ரூ.5,272 கோடியில் 52 விழுக்காடு தொகை தேர்தல் பத்திரங்கள் மூலமாக வந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.**

இதனால்தான் மக்கள் தெரிந்து கொள்ளக் கூடாது என்கிறது பா.ஜ.க.

## காற்று மாசு: டெல்லியில் பள்ளிகளுக்கு விடுமுறை!

புதுடெல்லி, நவ. 6 -

டெல்லியில் கடந்த சில தினங்களாக வழக்கத்திற்கு அதிகமாக காற்று மாசுபாடு ஏற்படுகிறது. டெல்லியின் பல்வேறு பகுதிகளில் காற்று மாசுபாடு அதிகரித்து புகை மூட்டமாக காணப்படுகிறது.

இந்த நிலையில், டெல்லியில் அதிகரித்து வரும் தொடர் காற்று மாசு காரணமாக அங்கு தொடக்கப் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. வருகிற 10ம் தேதி வரை அனைத்து அரசு பள்ளிகளுக்கும் விடுமுறை அளித்து டெல்லி அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும், 6 முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பாடங்களை ஆன்லைன் வழியாக நடத்தவும் உத்தரவிடப்பட்டு உள்ளது.




நீட் தேர்வு சட்டமாக இயற்றப்படுவதற்கு முன்பே அதை இந்திய ஒன்றியத்தில் முதன் முதலாக எதிர்த்தவர் நம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்களுடைய திருவாரூர் மண்ணில், ஆண்டிப்பந்தல் பகுதியில் நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார். உடன் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. உள்ளனர்.

## அமலாக்கத்துறை சோதனைகளால் தி.மு.க. வை பலவீனப்படுத்த முடியாது!

### தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கண்டனம்!

சென்னை, நவ.6-

தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு இல்லம் மற்றும் நிறுவனங்களில் அமலாக்கத்துறை சோதனை நடத்துவது அற்ப அரசியல் காரணங்களுக்காக என்பதால் இதனை வன்மையாக கண்டிக்கிறேன். பாரதிய ஜனதா கட்சி ஆட்சி செய்யாத மாநிலங்களில் உள்ள அரசுகளை அச்சுறுத்துவதற்கும், பணிய வைப்பதற்கும் அந்த ஆட்சியில் உள்ள கட்சியின் தொண்டர்களை மனச்சோர்வடைய செய்வதற்கும், மோடி அரசு அமலாக்கத்துறை, வருமான வரித்துறை மற்றும் சி.பி.ஐ. போன்ற மத்திய அரசு நிறுவனங்களை பயன்படுத்தி வருவது வாடிக்கையான ஒன்றாகும். அந்த அடிப்படையில் தற்போது பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில் உள்ள அரசு மற்றும் ஆட்சியில் உள்ள அரசியல் கட்சிகளை ஒடுக்குவதற்கும் அமைச்சர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகளை சோர்வடைய செய்வதற்கும் தற்போது சோதனை என்ற பெயரில் ஒன்றிய அரசின் நிறுவனங்களை ஏவி விட்டு இருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியதாகும்.

நடைபெற உள்ள ஐந்து மாநில சட்டப்பேரவை தேர்தல்கள் இதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இந்த மாநிலங்களில் பா.ஜ.க. வெற்றி பெற முடியாது என்பதால் ஆளும் கட்சியின் மீது மக்கள் மத்தியில் ஊழல் முத்திரை குத்தி அதன் மூலம் அரசியல் லாபமடைய மோடி அரசு முயற்சிக்கிறது. இந்த ஐந்து மாநில தேர்தல் முடிவுகள் மோடி அரசுக்கு முடிவுரை எழுத உள்ளது. அதனை தொடர்ந்து நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி மகத்தான வெற்றி பெற உள்ளது.

எனவே இந்த அச்சத்தின் காரணமாக தான் இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகளை அச்சுறுத்திட, அசிங்கப்படுத்திட இப்படிப்



பட்ட கேவலமான செயல்களில் மோடி அரசு ஈடுபட்டு வருகிறது. பாரதிய ஜனதா கட்சியை கருத்தியியல் ரீதியாக விமர்சிப்பதிலும் அந்த கட்சி ஆட்சியை அகற்றிவிட்டு ஒன்றியத்தில் ஜனநாயக அரசை அமைப்பதிலும் மிகுந்த அக்கறை கொண்டு செயல்பட்டு வருபவர் திராவிட முன்னேற்றக் கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் ஆவார். அவருடைய பெரும் முயற்சியால் இன்றைக்கு இந்திய அளவில் உள்ள பல்வேறு கட்சிகளை ஒன்றிணைத்து இந்தியா கூட்டணியை ஏற்படுத்தி உள்ளார்.

எனவே திராவிட முன்னேற்றக் கழகத்தை பலவீனப்படுத்தி விடலாம் என்று கனவு கண்டு அந்த கட்சியின் நிர்வாகிகள், அமைச்சர்கள் மீது தொடர்ந்து சோதனை நடத்தப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் தற்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிறந்த நிர்வாகியும், தளபதியின் சுட்டு விரல் நீட்டுக்கு ஏற்ப காரியங்களை கன கச்சிதமாக செய்து முடிக்கக் கூடிய ஆற்றலுக்கு சொந்தக்காரருமான பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு இல்லம் மற்றும் நிறுவனங்களில் கடந்த இரண்டு நாட்களாக சோதனை நடத்தப்பட்டு வருகிறது. இந்த சோதனைகள் மூலம் அமைச்சர் எ.வ.வேலு பணிய வைக்கலாம் என்று நினைத்தால் அது பகல் கனவாகிவிடும். அவர் ஒரு இரும்பு மனிதர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும், தலைவர் கலைஞர் மற்றும் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் மீதும் அசைக்க முடியாத அன்பு கொண்ட ஒரு அணுக்கத் தொண்டர் ஆவார்.

எனவே பா.ஜ. கட்சியின் இந்த தகுடுதத்தம் வேலைகள் மூலம் அமைச்சர் எ.வ.வேலுவையோ, திராவிட முன்னேற்றக் கழகத்தையோ ஒடுக்கி விட முடியாது. அவர்கள் எமர்ஜென்சி என்ற நெருப்பிலிருந்து வெளியே வந்த பீனிக்ஸ் பறவைகள். மோடி அரசு இப்படிப்பட்ட அசிங்கமான அரசியல் செயல்களால் ஒவ்வொரு நாளும் மக்கள் மத்தியில் நம்பிக்கை இழந்து, உலக அளவில் களங்கத்தை பெற்று வருகிறார் மோடி. ஆளுநர் ரவி, அண்ணாமலை, அரசு எந்திரங்கள் என்று வரிசை கட்டி தி.மு.க.வை வீழ்த்திட நாள்தோறும் முயற்சித்து வருகிறார்கள். அவை அனைத்தும் தி.மு.க.விற்கு பலம் சேர்ப்பவையாகவே அமைந்து வருகிறது. காரணம், இந்த இழிவான அநீதியான செயல்களை மக்கள் கண்டு முகம் சுளித்து வருவதை இந்த நாடு அறியும். மோடி அமித்ஷா கூட்டு சதியான அற்ப அரசியல் ஆதாயத்திற்காக அரசின் நிறுவனங்களை பயன்படுத்துவது வன்மையான கண்டனத்திற்கு உரியதாகும்.

இவ்வாறு பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## திருச்சி தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் பேச்சுப் போட்டி!

### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி - இரா.கிரிராஜன் எம்.பி. சிறப்புரை!

திருச்சி, நவ. 6-

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சட்டக்கல்லூரி மாணவர்கள், வழக்கறிஞர்களுக்கான பேச்சுப்போட்டி ஸ்ரீராம் மமஹால் பொன்மலைப் பட்டி மெயின் ரோட்டில் நடைபெற்றது. மாவட்ட வழக்கறிஞரணி தலைவர் கே.பன்னீர்செல்வன், தலைமை மாவட்ட மாநகர வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள் கே.ஏ.வி.தினகரன், எம்.பன்னீர்செல்வன் ஆகியோர் வரவேற்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் பள்ளி கல்வித்துறை அமைச்சர், திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தி.மு.க. சட்டத் திட்ட திருத்தக்குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி., மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் சட்டக் கல்லூரி மாணவர்கள் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழும் நினைவு பரிசும் வழங்கப்பட்டது. மாவட்ட, மாநகர வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ஏ.பாலசுப்பிரமணியன், எம்.கண்ணன், பா.சதாசிவம், பி.செந்தில், எம்.ஜெயசித்ரா, ஜி.ராஜலிங்கம், டி.செந்தில்குமார், சி.முனீஸ்வரன், ம.ஜெகதீஸ்வரன், ஏ.சுமதி, ஜி.பிரபாகரன், என்.கிருஷ்ணா, டாக்டர்.ஆர்.ராமச்சந்திரன், வண்ணை அரங்கநாதன், மாவட்ட மாநகர கழக நிர்வாகிகள் அ.த.த.செங்குட்டுவன், ரா.மூக்கன், வ.லீலாவேலு, இரா.குணசேகரன், ஆர்.ஏ. நூர்கான், ஆறு.சந்திரமோகன், பொன்.செல்லையா, வி.சரோஜினி, பகுதி கழகச் செயலாளர்கள் இ.எம்.தர்மராஜ், ஜி.மணிவேல் மற்றும் சட்டக் கல்லூரி மாணவர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்வில் அமைச்சர் அவர்களின் பேச்சு வழக்கறிஞர் அணி வடக்கே இருக்கும் கொள்கை எதிரிகளிடம் இருந்து நமது கழகத்தையும், நமது உரிமைகளையும் காப்பாற்றும் அணிதான் வழக்கறிஞர் அணி’ என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது!

நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் இறுதி ஓய்விற்கு இடம் கிடைப்பதற்காக சட்ட ரீதியாக வாதாடியவர்கள் வழக்கறிஞர் அணியினர். வழக்கறிஞர்கள் நமது கலைஞர் அவர்களின் மனதிற்கு மிகவும் நெருக்கமானவர்கள். அறத்தையும், நியாத்தையும் காப்பாற்றும் இடம் தான் நீதிமன்றம் என முழுமையாக நம்பியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவர் தனது எழுத்துகளில் பெரும்பாலும் தன்னை வழக்கறிஞராகத்தான் கருதிக்கொள்வார். அவரது எழுத்துகளில் உருவான திரைப்படங்களை ஆராயும் போது இந்த உண்மை புலப்படும். தனது கொள்கைகளை நீதிமன்றத்தின் வாதாடும் இடத்தில் இருந்து ஒரு வழக்கறிஞர் இடத்தில் இருந்துதான் பெரும்பாலும் சொல்லியிருக்கின்றார்.

**பராசக்தி:**

அதற்கு மிகச்சிறந்த உதாரணம் பராசக்தி! முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வசனம் எழுதிய 7’வது திரைப்படம்! ஆசியாவின் மிகப் பெரிய திரையரங்காக அந்தக் காலத்தில் கருதப்பட்ட மதுரை தங்கம் திரையரங்கத்தில் முழுமையாகக்கூட கட்டுமானப் பணிகள் முடிவடையவில்லை. அதில் முதல் படமாக பராசக்தி வெளியானது. சுமார் 2,500 பேர் அமரக்கூடிய இந்தத் திரையரங்கில், படிகளிலும் உட்கார்ந்து படத்தைப் பார்த்தார்கள். காரணம் அந்த நீதிமன்ற காட்சிதான்!

**பராசக்தி உருவான கதை:**

பராசக்தி திரைப்படத்தின் மூலக்கதையை எழுதியவர் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த பாவலர் பாலசுந்தரம். இந்த நாடகம் தேவி நாடகக் குழுவினரால் நாடகமாக நடிக்கப்பட்டுவந்தது.

இந்த நாடகத்தைப் பார்த்த நேஷனல் பிக்சர்சின் பி.ஏ.பெருமாள் முதலியார் அதனைப் படமாக்க விரும்பினார். இதைப்பற்றி அவர் ஏ.வி. மெய்யப்பச் செட்டியாரிடம் கலந்தாலோசித்த போது, ஏ.வி.எம். மற்றும் நேஷனல் பிக்சர்ஸ் இணைந்து படத்தைத் தயாரிப்பது என முடிவெடுக்கப்பட்டது.

கிருஷ்ணன் பஞ்சுவிடம் இயக்கம் ஒப்படைக்கப்பட்டது. மந்திரி குமாரி, மருதநாட்டு இளவரசி படங்களுக்கு வசனம் எழுதியதன் மூலம் அப்போது புகழின் உச்சத்தில் இருந்த கலைஞர் அவர்களிடம் திரைக்கதை வசனம் எழுதும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

அதுவரை உச்சத்தில் தான் இருந்தார் கலைஞர் அவர்கள். அப்படம் வெளி வந்த பிறகு இப்போது வரை யாரும் தொடமுடியாத புகழின் உச்சத்திற்கு சென்றுள்ளார்.

அதில் குணசேகரன் எனும் கதாபாத்திரத்தின் வழியாக கலைஞர் அவர்கள்தான் அந்தகால அரசாங்கத்தைப் பார்த்து வாதாடியிருப்பார்!

**‘பரப்பிரம்மம்’ :**

இந்தப் படத்தில் வசனம் எழுதியதற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு அன்றைய ஆளும் அரசாங்கத்திடம் இருந்து பல்வேறு நெருக்கடிகள் வந்தது!

ஒரு பத்திரிகை பராசக்தி படத்தைப் பற்றிய கேலி சித்திரத்தை வரைந்து ‘கதை மற்றும் வசவு: தயாநிதி’ எனவும் எழுதியிருந்தது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சிறிதும் அலட்டிக் கொள்ளவில்லை.

அதே ‘பரப்பிரம்மம்’ எனும் பெயரில் ஒரு நாடகத்தை எழுதினார். அன்றைய ஆளும் அரசாங்கத்தை எதிர்த்தும், அறமற்ற இதழியலை எதிர்த்தும் அந்த நாடகத்தில் வசனங்களை எழுதினார். அந்த ‘பரப்பிரம்மம்’ நாடகம் தமிழ்நாட்டில் 100’க்கும் மேற்பட்ட இடங்களில் திரையிடப்பட்டது!

படத்தின் கருவாகவும், தனது கொள்கைகளுக்கான இடமாகவும் நீதிமன்ற காட்சியை பயன்படுத்தி வாதாடிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்றும் ஏழை மக்களுக்காகவும், தமிழுக்காகவும், தமிழர்களுக்காகவும் வாதாடிக் கொண்டே இருப்பார்!



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 0311.23 அன்று திருச்சி தெற்கு மாவட்டம், திருச்சி (கி) மாநகர வழக்கறிஞர் அணிகளின் சார்பாக சட்டக்கல்லூரி மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கான பேச்சுப்போட்டி பொன்மலைப்பட்டி ஸ்ரீராம் மகாலில் நடைபெற்றது. அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. உடன் கழக சட்ட திட்ட திருத்தக் குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி., மாநகரச் செயலாளர் மு.மதிவாணன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர், கே.ஏ.வி.தினகரன், மாநகர வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.பன்னீர்செல்வன், மாவட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், சட்ட கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

## அமலாக்கத் துறையை ஏவிவிடும் பா.ஜ.க. அரசு!

# ‘இந்தியா’க் கூட்டணியை வெற்றி பெறச் செய்வதுதான் இதற்கான தீர்வு!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, நவ. 6 -

**இதுதான் ஒன்றிய பி.ஜே.பி. மோடி ஆட்சியின் ஜனநாயக அவலம்! வெற்றி பெற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களை விலைக்கு வாங்குவது அல்லது அவர்கள்மீது அமலாக்கத் துறையை ஏவிவிடுவது என்பதுதான் உண்மையான ஜனநாயகமா? வரும் 2024 தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெறச் செய்வதுதான் இதற்கு ஒரே தீர்வு என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:

ஜனநாயகத்தில் ஆளுங்கட்சிக்கு எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு அல்லது அதற்கடுத்த நிலையிலோ மதிக்கப்படவேண்டியவை எதிர்க்கட்சிகள் ஆகும்.

பார்லிமெண்டரி ஜனநாயகத்தின் எடுத்துக்காட்டாகக் காட்டப்படும் நாடு பிரிட்டன்; பிரிட்டிஷ் பார்லிமெண்டரி முறையின் முக்கிய கூறுபாடான கேபினெட் சிஸ்டம் (Cabinet System) என்ற முறையைத்தான் நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய மேதைகள் பின்பற்றி அமைத்துள்ளனர்.

இது அமெரிக்கா போன்ற அதிபர் ஆட்சி (Presidential System) முறை கிடையாது.

பிரிட்டனில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் “விசுவாசமுள்ள எதிர்க்கட்சித் தலைவர்” “His Majesty’s Loyal Opposition Leader” என்றே அழைக்கப்படுகிறார்.

நியாயமான தேர்தல்மூலமே தோற்கடித்து பதவிக்கு வரவே முயலுவர் எதிர்க்கட்சிகளைப் பழிவாங்கும் உணர்வு முறை ஆளுங்கட்சிக்கு இல்லாமல், நியாயமான தேர்தல்மூலமே தோற்கடித்து பதவிக்கு வரவே முயலுவர்.

பெரும்பாலும் வெற்றி பெற்ற கட்சியினரை விலைக்கு வாங்குதல், பேரம் பேசுதல் போன்ற ‘அரசியல் அசூசைகளை’ அவர்கள் கையாளுவதில்லை.

ஆனால், இங்கேதான் “ஆயாராம் காயாராம்’’ என்ற கட்சித் தாவல், வெற்றி பெற்றவர்களை விலைக்கு வாங்கும் கேவலம் வேர் கொண்டுள்ளது. பா.ஜ.க.வின் கடந்த 9 ஆண்டு கால ஆட்சியில் உச்சத்திற்குச் சென்றுள்ள இந்த அரசியல் அவலம் தொடர்கதையாக உள்ளது!

வருமான வரித் துறை சி.பி.அய். அமலாக்கத் துறை ஆகியவற்றை அரசியல் ஏவுகணைகளாக்கி வருகின்றனர்!

அதுபோலவே, அப்படி மசியாது, கொள்கை வழியில் கட்சித் தாவலுக்குத் தயங்குபவர்களுக்கோ இடந்தராது, ஆளும் பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். அரசை எதிர்த்தால் உடனடியாக அவர்களைத் தங்களது ‘அரசியல் திரிசூலமான’ வருமான வரித் துறை சி.பி.அய். அமலாக்கத் துறை ஆகியவற்றைஅரசியல்ஏவுகணைகளாக்கி, திடீர் சோதனை, வழக்குகள், கைதுகள்மூலம் அரசியல் பழிவாங்குவது தொடர் கதையாகி வருகிறது!

புதுச்சேரியில் அமைந்த என்.ஆர். காங்கிரஸ் பா.ஜ.க. கூட்டணி அரசு எப்படி முந்தைய காங்கிரஸ் கட்சியினரை மாற்றி, அரசு அமைத்தது என்பது அனைவரும் அறிந்த ஒன்று!

2024 பொதுத்தேர்தல் நெருங்குகிறது என்கிற நிலையில், தமிழ்நாட்டில் ‘திராவிட மாடல்’ ஆட்சி, அதன் ஒப்பற்ற முதலமைச்சர் ‘சமூகநீதிக்கான சரித்திர நாயகர்’ மு.க.ஸ்டாலின் அவர்களது அமைச்சரவை அமைச்சர்கள், முக்கிய எம்.பி.,க்கள் போன்றவர்களைக் குறி வைத்து இப்படி சோதனை, வழக்குகள், ரெய்டுகள் பாய்வதுபற்றி மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

**மக்கள் மத்தியில் தி.மு.க.விற்கு ஓர் அவப்பெயரை உண்டாக்கவே!**

சில ஏடுகள் ‘கோயபல்ஸ்’ பாணியையே பின்பற்றி, உண்மைக்கு மாறான ஊதிப் பெருக்கப்பட்ட செய்திகளைப் பரப்புதல், பா.ஜ.க. தலைவர்கள் அவற்றைப்பற்றிப் பேசுவது எல்லாம் அரசியல் காழ்ப்புணர்வுவோடு, மக்களுக்குக் கொள்கை அடிப்படையிலான நலத் திட்டங்களைச் செயற்படுத்தி அதன்மூலம் தங்களது ஆட்சிக்கு ஆதரவு பெறாமல், ‘இந்தியா’ கூட்டணிக்குத் தி.மு.க.தான் வழிகாட்டியாக, மூலவராக நமது முதலமைச்சர்தான் இருக்கிறார் என்பதால், அவரது அமைச்சர்களுக்கு மக்கள் மத்தியில் ஓர் அவப்பெயரை உண்டாக்கவே இந்த முறை தொடர்ந்து பின்பற்றப்படுகிறது.

இம்மாதம் நடைபெறும் 5 மாநிலத் தேர்தல்களில் எதிர்க்கட்சி முதலமைச்சர்கள் என்பதால், அவர்கள்மீது இந்த ‘திரிசூலங்கள்’ பாய்ச்சப்பட்டு இருக்கின்றன.

ராஜஸ்தான் முதலமைச்சர் மகன்மீது சட்டீஸ்கார் முதலமைச்சர் பூபேஷ் பாகல்மீது டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால்மீது இப்படி ஒரு நெருக்கடி, கைது மிரட்டல்கள் தொடரும் நிலை!

தமிழ்நாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள்மீது இப்படி மிரட்டல்கள் நடக்கின்றன.

சட்டம் தன் கடமையைச் செய்வதில் யாருக்கும் தடை இல்லை. ஆனால், அவை அபாண்டமாக இருப்பதுதான் கண்டிக்கத்தக்கது.

தி.மு.க. எம்.பி., ஜெகத்ரட்சகன் வீடு, அவர் நடத்தும் கல்வி நிறுவனங்களில் சோதனை, தமிழ்நாடு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் நடத்தும் கல்வி நிறுவனங்களில் சோதனை போன்ற செய்திகள்.

**2ஜி வழக்கில் ஆதாரங்களைத் தர முடிந்ததா?**

அதுபோலவே, ஆ.இராசா அவர்கள்மீது முன்பு 2ஜி வழக்கில் எத்தனையோ பூஜ்ஜியங்களைப் போட்டு 1.75 லட்சம் கோடி ரூபாய் இழப்பு என்று தொடுத்த வழக்கு என்னாயிற்று? ஆதாரங்களைத் தர முடிந்ததா?

மாறாக, இன்றைய ஒன்றிய ஆட்சியான பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். ஆட்சியில் ஏழரை லட்சம் கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளதைச் சுட்டிக்காட்டி சி.ஏ.ஜி. அறிக்கை கொடுத்தது. இதன்மீது “ஊழலை ஒழிக்க வந்த உத்தமர்கள்’’ ஆட்சி என்ன நடவடிக்கை எடுத்தது?

சில அதிகாரிகளை மாற்றினால், ஊழல் நிவர்த்தியாகிவிட்டதாக அர்த்தமா?

மக்கள்தான் இறுதித் தீர்ப்பை ஜனநாயகத்தில் தேர்தல்மூலம் அளிப்பவர்கள் அவர்கள் உன்னிப்பாக கவனித்து வருகிறார்கள்!

தேர்தல் நிதி பெறுவதில் ஒரு சார்பு வாய்ப்புப்பற்றி ஆளுங்கட்சிக்குள்ள தகவல் தெரிந்துகொள்ளும் அவ்வாய்ப்பு மற்ற எதிர்க்கட்சிகளுக்கு இல்லையே! அதையும் அவர்களுக்குத் தருவது ஒன்றே நியாயமான வெளிப்படையான தன்மை என்று உச்சநீதிமன்றம் சொல்லியிருக்கிறதே!

“அரசியல் பிழைத்தோருக்கு நிச்சயம் அறங்கூற்றாகும்” என்பது உண்மை!

அதை மக்கள் தேர்தல் முடிவுகள்மூலம் நிரூபிப்பார்கள்.

‘இந்தியா’ கூட்டணி இத்தகைய ஜனநாயக அவலங்களை முறியடிக்கும்!

ஆளுங்கட்சியின் அதிகார துஷ்பிரயோகம், பண பலம், புஜபலம், பத்திரிகைகள் பலம் எல்லாம் தாண்டி, மக்கள் பலம்மூலம் ‘இந்தியா’ கூட்டணி இத்தகைய ஜனநாயக அவலங்களை முறியடிக்கும்.

எதிர்க்கட்சித் தலைவர்களைத் தாண்டி, மக்கள் அதற்கு ஆயத்தமாகி விட்டார்கள் என்பதை 5 மாநிலத் தேர்தல் முடிவுகள் நிச்சயம் உணர்த்தும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ் முன்னிலையில் கடலூர் தேவனாம்பட்டினம் வெள்ளி கடற்கரையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் வாயிலாக ‘நடப்போம் நலம்பெறுவோம் நடைப்பயிற்சியை துவக்கிவைத்து பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம் கடலூர் மாநகர மேயர் திருமதி.சுந்தரிராஜா மாநகர துணைமேயர் பா.தாமரைச்செல்வன் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் சுகாதாரத் துறை, வருவாய்த் துறை, காவல் துறை, பொதுப்பணித் துறை, தோட்டக்கலைத் துறை, வனத்துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் நெடுஞ்சாலைத் துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் நடைப்பயில்வோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## தமிழ்நாட்டு மருத்துவ மாணவர் ராஞ்சியில் இறந்தது தொடர்பாக

# உரிய விசாரணையை விரைந்து மேற்கொள்வீர்!

## ஜார்கண்ட் மாநில முதலமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, நவ.6-

தமிழ்நாட்டைச் சேர்ந்த மருத்துவ மாணவர் ம.மதன்குமார் என்பவர் ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் இறந்ததற்கு உரிய விசாரணை மேற்கொள்ள வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். மேலும் உயிரிழந்த மதன்குமாரின் குடும்பத் திற்கு ஆறுதல் மற்றும் மூன்று இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிப்பதாக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் வேலகவுண்டம்பட்டி அருகே உள்ள புத்தூரைச் சேர்ந்த மதியழகன் என்பவரது மகன் ம.மதன்குமார் (வயது 28) ஜார்க் கண்ட் மாநிலம் ராஞ்சியில் உள்ள இராஜேந்திரா மருத்துவக் கல்லூரியின் (Rajendra Institute of Medical Sciences) விடுதியில் தங்கி இரண்டாம் ஆண்டு தடயவியல் மருத்துவம் படித்து வந்த நிலை யில், ம.மதன்குமார் காணாமல் போய் பின்னர் அவரது உடல் எரிந்த நிலையில் சடலமாக அவர் தங்கியிருந்த விடுதியின் பின்புறத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த மனவேதனையடைந்தேன்.

உடனடியாக தமிழ்நாடு அரசின் உயர் அலுவலர்கள் ஜார்க்கண்ட மாநில அரசுடன் தொடர்பு கொண்டு ம.மதன்குமாரின் உடலை அவரது சொந்த ஊருக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை விரைந்து மேற்கொண்டதன் அடிப்படையில், அவரது உடல் விமானம் மூலம் கொண்டு வரப்பட்டு, அவரது குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டு, வனத்துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் மற்றும் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரால் அஞ்சலி செலுத்தப்பட்டு, நேற்று காலையில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.

மேலும், ம.மதன்குமார் மர்மான முறையில் இறந்த சம்பவம் குறித்து ஜார்க்கண்ட் மாநில காவல் துறையினரும் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

**இறந்தவர் குடும்பத்துக்கு ரூ.3 லட்சம் நிதி உதவி**

இந்த துயரமான சூழ்நிலையில், ம.மதன்குமாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர் மற்றும் அவரது உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் குடும்பத்தாருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிட உத்தர விட்டுள்ளேன்.

மேலும், ம.மதன்குமார் அவர்கள் இறந்தது குறித்து உரிய விசாரணையை விரைந்து மேற்கொண்டு, அவரது இறப்பிற்கு நீதி கிடைக்கும் வகையில் துரித நடவடிக்கை மேற்கொள்ளவும் நான் கடிதம் மூலம் ஜார்க் கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன் அவர்களை வலியுறுத்தியுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## நாமக்கல் மாவட்டத்தில்

# “நடப்போம் நலம் பெறுவோம்” சுகாதார நடைபாதைத் திட்டம்!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் துவக்கி வைத்தார்!

நாமக்கல், நவ. 6 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும்48, இதயம் காப்போம், சிறுநீரக பாதுகாப்பு திட்டம், கலைஞரின் வருமுன் காப்போம் போன்ற பல்வேறு திட்டங்கள் மிகச்சிறப்பான வகையில் பொதுமக்கள் நலன் கருதி செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் பொது மக்கள் நலன் மற்றும் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு ”நடப்போம் நலம் பெறுவோம்” எனும் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் நடைபயிற்சி மேற்கொள்வதற்காக 8 கி.மீ தூரம் நடைப்பாதை கண்டறியப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில், நாமக்கல் அரசு (தெற்கு) மேல்நிலைப் பள்ளியில் துவங்கி மோகனூர் சாலை வழியாக டிரினிட்டி கல்லூரி வரை சென்று திரும்பவும் நாமக்கல் அரசு (தெற்கு) மேல்நிலைப் பள்ளியில் வந்தடையும் வண்ணம் 8 கிலோமீட்டர் தொலைவிற்கு “நடப்போம் நலம் பெறுவோம்” சுகாதார நடைபாதை திட்டத் துவக்க விழா நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வனத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு இத்திட்டத்தை துவக்கி வைத்து பேசினார். அப்போது, உலக சுகாதார அமைப்பின் தரவுகளின் படி 10,000 அடிகள் அதாவது 8 கி.மீ நடப்பதால் நீரிழிவு மற்றும் இரத்த அழுத்த நோய்கள் 28 சதவீதமும், இதயநோய் தாக்கம் 30 சதவீதமும் குறைகின்றது என்று அறியப்படுகிறது. நடைபயிற்சியானது மக்களை சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமான எடையுடன் இருக்கவும் நாள்பட்ட உடல் பிரச்சனைகள் மற்றும் மன அழுத்தத்தை குறைக்கவும் உதவுகிறது. இந்த நடைப்பயிற்சி சிறியவர்கள் முதல் முதியோர்கள் வரை அனைத்து தரப்பினருக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

மேலும், இப்பகுதியை வாரத்தின் அனைத்து நாட்களும் நடைபயிற்சிக்கு பயன்படுத்தி ”நடப்போம் நலம் பெறுவோம்” எனும் நோக்கில் அனைவருக்கும் நலவாழ்வு பேணுவதற்கான நடைப்பயிற்சி பிரதி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெறும். இத்திட்டத்தை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி உடல் நலத்தை பேணி காக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்நடைபயிற்சியில் நாமக்கல் நகர் மன்ற தலைவர் து.கலாநிதி, மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.சிவக்குமார், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் மா.க.சரவணன், இணை இயக்குநர் (மருத்துவம்) மரு.ராஜ்மோகன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு. ச. பூங்கொடி, மாவட்ட விளையாட்டு அலுவலர் எஸ்.கோகிலா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சதீஷ்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் முருகன் மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட கலந்து கொண்டனர் .



தருமபுரி கிழக்கு மாவட்டம் நகராட்சி பகுதியில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தல் சிறப்பு முகாம் நடைபெறுவதையொட்டி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி மற்றும் தொகுதி பார்வையாளர், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் டாக்டர்.ஏ.கே.தருண் முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் ரேணுகா தேவி, நகர கழக அவைத்தலைவர் அழகுவேல், துணைச் செயலாளர்கள் முல்லைவேந்தன், அன்பழகன் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ரஹீம், காசிநாதன், எம்.பி.கௌதம் மற்றும் நிர்வாகிகள், கிளை செயலாளர்கள், பாக முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கோவை – இருகூர் பேரூராட்சி

# தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம்!

## அமைச்சர் சு.முத்துச்சாமி பங்கேற்பு!

கோவை, நவ. 6 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்டம் சூலூர் ஒன்றியம் இருகூர் பேரூர் கழகம் சார்பில் பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு தினசரி காலை உணவு வழங்கும் திட்டத்தை இருகூர் பேரூராட்சி அலுவலகத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், நகர்புற வளர்ச்சி, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துச்சாமி துவங்கி வைத்து சிறப்புரையாற்றி னார்.

இந்நிகழ்ச்சிக்கு தலைமை செயற்குழு உறுப்பினரும், இருகூர் பேரூராட்சி தலைவருமான ஆ.சந்திரன் தலைமை தாங்கினார். பேரூர் கழக செயலாளர் இரா.தீனதயாளன் வரவேற்று பேசினார்,

கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், மாவட்ட மீனவரணி அமைப்பாளர் இருகூர். செந்தில்,ஜெயகுமார்,பெ. இராஜேந்திரன், இ.க. இளஞ்செழியன், உதய பூபதி, இரா.ராஜேந்திரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

உலக தமிழர்களின் பாதுகாவலர் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து துறைகளிலும் தலை நிமிர செய்து ஐம்பது ஆண்டு காலம் உழைத்து மறைந்தார். அவருடைய வளர்ச்சி திட்டங்களால், அன்பினால், கட்டுக்கோப்பால் இருகூர் மக்கள் தி.மு.கழகத்தினால் அடைந்த ஒட்டு மொத்த வளர்ச்சிகளான குடிநீர்,சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, என அனைத்து வசதிகளும் கிடைக்க செய்த மாமனிதர் கலைஞர் அவர்கள். இறுதியாக சுமார் ஐம்பது கோடி ரூபாய் மதிப்பில் இரண்டு மேம்பாலங்கள் கட்டி தந்து மக்களை மகிழ்ச்சியடைய செய்தார்.

தி.மு.கழகத்தின் உயிர் மூச்சு கலைஞர் அவர்கள் ஓய்வு எடுத்ததிலிருந்து அவருடைய நினைவாக தொடர்ந்து 1204 நாட்கள் ஆதரவற்ற முதியோர்களுக்கு இருகூர் தி.மு.கழகத்தின் சார்பில் தினந்தோறும் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் இதனை தொடர்ந்து அவருடைய கருணை, பாச உணர்வில் அவரது நிழலாக தமிழினத்தையும், திராவிட இயக்கத்தையும் வழி நடத்தி கொண்டு இருக்கும் நம் குடும்ப தலைவரும், தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின் தளபதி அவர்களுடைய பல்வேறு நலத் திட்டங்கள் மூலமாக தமிழக மக்கள் பயனடைந்து வருகின்றனர்.


முதல்வரின் பலநாள் கனவை நிறைவேற்றும் வகையில் உள்ளாட்சியில் தூய்மை பணியாளர்களின் குழந்தைகளின் படிப்பு மேன்மையடைய வேண்டும் அதன் அடிப்படை தேவை காலை உணவு அது கிடைப்பதின் மூலமாக குழந்தைகள் கண்டிப்பாக பள்ளிக்கு வரும் என நோக்கில் பள்ளியில் காலை உணவு திட்டத்தை முதல்வர் அவர்கள் அமல்படுதினார்.

மேலும் முதல்வர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களை மனதில் வைத்து பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கியதை போல், அந்த தூய்மை பணியாளர்களுக்கும் காலை உணவு வழங்க வேண்டும் என்று திட்டம் தீட்டி கோவை இருகூர் தி.மு.கழகத்தின் சார்பில் காலம் முழுவதும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இதனால் பேரூராட்சியின் சுகாதார தூய்மையும் மேம்படும்,இந்த திட்டத்தை துவங்கி வைக்க மாண்புமிகு அமைச்சர் சு.முத்துச்சாமி மிகுந்த மகிழ்ச்சியோடு வந்து துவங்கி வைத்து தனது சார்பாகவும் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ரகுநாதன்,நீலாம்பூர் சீனிவாசன்,வெங்கடாபுரம் நடராஜன்,இருகூர் பேரூராட்சி அலுவலர்கள்,மன்ற உறுப்பினர்கள்,வார்டு செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியை இருகூர் பேரூர்க் கழக நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.



திருப்பூர் மாநகராட்சி, 47வது வார்டு விஜயாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில், பள்ளிக் கல்வித்துறை சார்பில் ரூ.1.55 கோடி மதிப்பீட்டில், 8 புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கான பணிகளை திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மண்டலத் தலைவர் சி.கோவிந்தசாமி, பகுதி செயலாளர் மேங்கோ அபழனிச்சாமி, வட்டக் கழக செயலாளர் வெங்கட்ராஜா, மாமன்ற உறுப்பினர் ஜெயசுதா பூபதி உள்பட கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மழைக்காலங்களில் பணிபுரிய 29 ஆயிரம் பேர் தயார் நிலையில் உள்ளனர்!

# மழைநீர் வடிகால் பணிகள் 98 சதவிகிதம் முடிக்கப்பட்டுள்ளன!

## அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!



சென்னை, நவ. 6 -

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சிகுட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சிகுட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ரிப்பன் கட்டடத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து கண்காணிக்கப்படுவதைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இதனை தொடர்ந்து நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் வாரிய அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வடக்கிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சேரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை குறித்து நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மழைநீர் வடிகால்வாய் இணைப்புப் பணிகள் முடிவடையாத இடங்களில் குழாய் பதித்து மேற்கொள்ளப்பட்டுள்ள இணைப்பு நடவடிக்கைகளையும் தாழ்வான பகுதிகளில் மழைநீர் வெளியேற்றுவதற்காக வைக்கப்பட்டுள்ள மோட்டார் பம்புகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது குறித்தும் பேரிடர் மீட்பு வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் தயார் நிலையில் வைத்தல் நிவாரண மையங்கள், சமையல் கூடங்கள் ஏற்பாடு, டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மருத்துவம் முகாம் நடத்துதல் உள்ளிட்ட முன் னெச்சரிக்கை நடவடிக்கைகளை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் விழிப்புணர்வுடன் பணியாற்றிட அறிவுறுத்தினார்.

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

பெருநகர சென்னை மாநகராட்சியில் இரண்டு, மூன்று நாட்களில் ஒரே நேரத்தில் 11 செ.மீ. மழை பெய்திருந்தாலும், ஒரு மணி நேரத்திற்குள்ளாக அனைத்து இடங்களிலும் மழைநீர் வடிந்து விட்டது. அந்த அளவிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் களப் பணியாற்றி உள்ளனர். மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளில் இணைப்புப் பணிகள் 9 இடங்களில் மட்டும் தான் மேற்கொள்ளப்பட வேண்டும். இளையா முதலி தெருவில் மட்டும் 560 மீ. என மொத்தம் 3000 மீ. மட்டும் தான் இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இந்தப் பணிகளும் குடிநீர் இணைப்பு மற்றும் கேபிள் பதிப்பு பணிகளின் காரணமாக காலதாமதம் ஆகிறது.

மழைநீர் வடிகால் பணிகளில் 98% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2% பணிகள் மட்டுமே இன்னும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. சென்னை மாநகரில் மழைநீர் தேங்காதவாறு அலுவலர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் என அனைவரும் ஒருங்கிணைந்து பணிபுரிந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆலந்தூர் மண்டலத்தில் அரை மணி நேரத்தில் 9 செ.மீ. க்கு மேல் மழை பெய்துள்ளது. குறைவான நேரத்தில் அதிகமான மழை பெய்யும் பொழுது மட்டும் மழைநீர் தேங்கியது. ஆனால் ஒரு மணிநேரத்தில் நீர் வடிந்து விடுகிறது. இதை விட அதிகமான மழை பெய்யும் பொழுது ஒரு மணி நேரத்தில் வடிந்து விடும் வகையில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது.

அதிகமான பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் உள்ள பொதுமக்களை தங்க வைப்பதற்காக நிவாரண மையங்களும், மழைக்காலங்களில் விழும் மரங்கள் மற்றும் மரக்கிளைகளை அகற்றுவதற்கு மர அறுவை இயந்திரங்கள், மழைநீர் தேங்கினால் உடனடியாக அகற்றிட மோட்டார் பம்புகள், எந்த இடத்திலாவது பைப் லைனில் அடைப்பு ஏற்பட்டால் ஜெட்ராடிங் வாகனம் மூலம் அகற்றுதல் என அனைத்தும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மழைக்காலங்களில் பணிபுரிய ஏதுவாக சென்னைக் குடிநீர் வாரியத்தில் 2 ஆயிரம் பேர், பெருநகர சென்னை மாநகராட்சியில் 27 ஆயிரம் பேர் தயார்நிலையில் உள்ளனர்.

மழைக்காலங்களில் குடிநீருடன் கழிவுநீர் கலப்பதைத் தடுத்திடும் வகையில், சென்னைக் குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் எங்கெங்கே பழுதுகள் ஏற்பட்டுள்ளதோ, அவற்றை மாற்றுவதற்கான பணி நடைபெற்று வருகிறது. தற்பொழுது மழையின் காரணமாக இந்தப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதற்காக பள்ளம் தோண்டும் பொழுது சாலைகள் பழுதடைந்து, பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள் என்கிற காரணத்தினால் 2 மாத காலத்திற்கு இந்தப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்களுக்கு நாள்தோறும் 1500 நடைகள் லாரிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நாள்தோறும் 1000 எம்.எல்.டி. குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தின் கீழ் 150 எம்.எல்.டி. குடிநீர் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்னும் 10 நாட்களுக்குள் இந்தப் பணிகள் முடிக்கப்படும். மேலும் கூடுதலாக 400 எம்.எல்.டி குடிநீர் கிடைக்க பணிகள் தொடங்கப்பட உள்ளது. நீர்வளத் துறையின் சார்பில் செம்பரம்பாக்கம் ஏரியில் வரும் அதிகளவு நீரினை தேக்கி வைக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவற்றை சீர்செய்யும் பணிகளுடன், சென்னை யில் உள்ள ஏரிகளை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி நீரினை தேக்கி வைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 30,ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாலைகள் உள்ளன. தற்பொழுது 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாலைகள் புதிதாக போடப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் சிறப்பு அனுமதி பெற்று சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலமாக வடசென்னையில் பல்வேறு பணிகளை மேற்கொள்ள ரூ.1000 கோடி மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் பெருமக்கள் திரு.வி.க.நகர் மண்டலத்தில் டிமலஸ் (Demellows) சாலையில் உள்ள கால்வாயில் நீர் வெளியேற்றும் நிலைய செயல்பாட்டினையும், செங்கை சிவம் பாலப் பகுதியில் (ஸ்டீபன்சன் சாலை) செல்லும் ஓட்டேரி நல்லா கால்வாய் கரைப் பகுதியில் கட்டப்பட்டுள்ள மழைநீர் கால்வாய் இணைப்பினையும், ஷட்டர் (shutter) அமைத்து நீர் வெளியேற்றும் நடவடிக்கைகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின்போது மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் .தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர்.டி.ஜி.வினய், கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், மத்திய வட்டார துணை ஆணையர். கே.ஜெ. பிரவீன் குமார், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் சரவணன், மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நடைபெற்றது. கன்னியாகுமரி மேற்கு மாவட்ட செயலாளர் பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில்

# இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

## அமைச்சர் மனோ தங்கராஜ் - மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் பங்கேற்பு!

குமரி,நவ.6 -

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நேற்று (05.11.2023 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் வைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர் ஆகிய பொறுப்புகளுக்கான நேர்காணல் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில், நாகர்கோவில் மாநகர செயலாளர் ப. ஆனந்த், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி. அகஸ்தீசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், கழக இளைஞர் அணி மாநில துணை செயலாளர்கள் இன்பா ஏ.என். ரகு, பி. அப்துல் மாலிக், என். இளையராஜா, கே.ஈ. பிரகாஷ், பி. எஸ். சீனிவாசன், ஜி.பி. ராஜா, கே. பிரபு கஜேந்திரன், சி. ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு விண்ணப்பித்தவர்களுக்கு தனித்தனியே நேர்காணல் நடத்தினர். நாகர்கோவில் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சி.டி. சுரேஷ், மாவட்ட, மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் பலர் பங்கேற்றனர்.

ஈரோடு வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில்

# மாநில அளவிலான பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான பேச்சு - கட்டுரைப் போட்டிகள்!

## என்,நல்லசிவம் – முன்னணியினர் பங்கேற்பு!

ஈரோடு, நவ, 6-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில், கழக மாணவரணி செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான சி.வி.எம்.பி.எழிலரசன் வழிகாட்டுதலின்படி, ஈரோடு வடக்கு மாவட்ட மாணவரணி நடத்திய மாநில அளவிலான பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கான பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரை போட்டிகள் 02/11/2023 வியாழக்கிழமை பாவா திருமண மண்டபம், கவுந்தப்பாடியில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த போட்டிகளில் 115 பள்ளிகள் மற்றும் 40 கல்லூரிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் அ.பெருமாள்சாமி, மாவட்ட துணை செயலாளர்கள் கீதாநடராஜன், எஸ்.எஸ்.குருசாமி, மாநில மருத்துவரணி துணைத் தலைவர் எம்.செந்தில்நாதன், மாநில விவசாய அணி இணை செயலாளர் கள்ளிப்பட்டி.மணி, செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.பி.புகழேந்தி, வி.பி.சண்முக சுந்தரம், ஓ.சுப்பிரமணியம், M.S.சென்னிமலை, பொதுக்குழு உறுப்பினர் ஆர்.மாதேஸ்வரன், பவானி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பி. துரைராஜ், சத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.சி.பி. இளங்கோ, பவானி நகர செயலாளர் ப.சீ.நாகராஜ், கோபி நகர செயலாளரும் நகர்மன்றத் தலைவருமான என்.ஆர். நாகராஜ், சலங்கபாளையம் பேரூராட்சி மன்றத் தலைவர் எஸ்.பழனிச்சாமி, பெரிய கொடிவேரி பேரூராட்சி மன்றத் தலைவர் தமிழ்மகன் சிவா, காசிபாளையம் பேரூராட்சி மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி வெற்றிவேல், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.திருவேங்கடம், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் எஸ்.ஏ.அன்பழகன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் கே.ஜீ.விஜய் ஆனந்த் , மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் ஓ.என்.சுதாகர், டி.கே.கிருபாகரன், மாணவரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ். வினோத்குமார், கே.செந்தூர், எஸ்.சுதா, எம்.நவீன்குமார் உள்ளிட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பரிசு பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவர்கள்

பேச்சு போட்டி (பள்ளி)

1. முதல் பரிசு ஓவியா அரசு மேல்நிலைப்பள்ளி, அய்யம்பாளையம்.

2.இரண்டாம் பரிசு கவியரசு அரசு மேல்நிலைப்பள்ளி, குருப்பநாயக்கன் பாளையம்

3.மூன்றாம் பரிசு தேவபாலா அரசு மேல்நிலைப் பள்ளி, புதுப்பாளையம்

பேச்சு போட்டி (கல்லூரி)

1. முதல் பரிசு சந்தியா - ஜேகேகே முனிராஜா காலேஜ் ஆப் டெக்னாலஜி, தூ.நா.பாளையம்

2. இரண்டாம் பரிசு பா. பிரபு காமதேனு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சத்தி

3. மூன்றாம் பரிசு பா.பிரதீப் ஜேகேகே முனிராஜா காலேஜ் ஆப் டெக்னாலஜி, தூ.நா.பாளையம்

கட்டுரைப் போட்டி (பள்ளி)

1.முதல் பரிசு செ.கலைவாணி அரசு மேல்நிலைப் பள்ளி, செம்புளிச்சாம்பாளையம்

2. இரண்டாம் பரிசு அ. சாமிநாதன் அரசு மேல்நிலைப்பள்ளி.

3. மூன்றாம் பரிசு தாரிகா அரசு மேல்நிலைப்பள்ளி, மயிலம்பாடி

கட்டுரைப் போட்டி (கல்லூரி)

1. முதல் பரிசு க.ஷங்கரன் காமதேனு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சத்தி

2. இரண்டாம் பரிசு ப. ஜனனி - ஜேகேகே முனிராஜா காலேஜ் ஆப் டெக்னாலஜி, தூ.நா.பாளையம்

3. மூன்றாம் பரிசு மு. ஆசியா பேகம் ஜேகேகே சம்பூரணியம்மாள் பாலிடெக்னிக் கல்லூரி தூ.நா.பாளையம்.

பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகளில் மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்ற மாணவ, மாணவிகள் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்வர்.

போட்டிகளில் கலந்து கொண்ட அனைத்து மாணாக்கர்களுக்கும் பாராட்டு சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கப்பட்டன.

மேற்கண்ட போட்டிகளுக்கு பரிசுத் தொகை வழங்கியவர்கள்.

என்.ஆர்.நாகராஜ் நகர செயலாளர் மற்றும் நகர் மன்றத் தலைவர், கோபி

ஜானகி ராமசாமி நகர செயலாளர் மற்றும் நகர் மன்றத் தலைவர், சத்தி

ப.சீ நாகராஜ் நகர செயலாளர், பவானி

பி.எ.சிதம்பரம் நகர செயலாளர் மற்றும் நகர் மன்றத் துணைத் தலைவர், பு.புளியம்பட்டி.

கேசிபி.இளங்கோ சத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் மற்றும் ஒன்றிய குழுத் தலைவர் இரவிச்சந்திரன் பேரூர் செயலாளர் மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவர், K.N.பாளையம் தமிழ்மகன் சிவா பெரிய கொடிவேரி பேரூராட்சி மன்றத் தலைவர்

அன்பரசு பேரூர் செயலாளர் மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவர், கொளப்பலூர்

தமிழ்ச்செல்வி வெற்றிவேல் பேரூராட்சி மன்றத் தலைவர், காசிபாளையம்

ப.செந்தில்குமார் ஒன்றிய கழக செயலாளர் மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவர், நம்பியூர் பழனிச்சாமி பேரூர் செயலாளர் மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவர், சலங்கபாளையம்

ஆனந்தகுமார் பேரூர் செயலாளர் மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவர், ஜம்பை.

# நாமக்கல் ஒன்றியத்தில் உள்ளாட்சி தின சிறப்பு கிராம சபைக் கூட்டம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி – ஆட்சியர் உமா – பெ.இராமலிங்கம் எம்.எல்.ஏ. பங்கேற்பு

நாமக்கல், நவ.6-

நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், மாரப்பநாயக்கன் பட்டி ஊராட்சியில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சித் தலைவர் என்.நளங்கிள்ளி தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கிராம ஊராட்சியில் சிறப்பாக பணிபுரிந்த ஊழியர்களுக்கும், சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் மகளிர் சுய உதவிக் குழுவினரை பாராட்டி கூற வைத்தார். மேலும், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், இணையவழி வீட்டுவரி / சொத்துவரி செலுத்துதல், டெங்கு காய்ச்சல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு, 18 வயதிற்கு மேல் உள்ள புதிய வாக்காளர் சேர்க்கை முகாம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் உள்ளிட்ட பொருட்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் கே.ஆர். என்.இராஜேஸ்குமார் எம்.பி பேசும் போது, உள்ளாட்சி தினத்தையொட்டி மாரப்பநாயக்கன்பட்டி ஊராட்சியில் கிராம சபைக் கூட்டம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குடும்பத்திற்காக அயராது உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்திற்காக குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1000/ உரிமைத் தொகையாக வழங்கிடும் வகையில் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ஏற்கப்படாத விண்ணப்பதாரர்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால், குறுஞ்செய்தி பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் இசேவை மையம் வழியாக வருவாய் கோட்டாட்சியருக்கு மேல்முறையீடு செய்யலாம்.


மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் 30 நாட்களுக்குள் தீர்வு செய்யப்படும்.

எனவே தகுதியுள்ள அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கிடைக்கும். அதோடு மட்டுமல்லாமல் இத்திட்டம் என்பது ஒரு தொடர் திட்டம் என்பதால் வருடந்தோறும் தகுதியுள்ள அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு அனைத்து வேலை நாட்களிலும் இலவச காலை உணவு வழங்கிடும் வகையில் முதலமைச்சர் அவர்களால் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தன் கீழ் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ரவா உப்பமா, பொங்கல், சாம்பார் சாதம், கிச்சடி உள்ளிட்டவை தரமான முறையில் வழங்கப்பட்டு வருகிறது. அதே போன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் நகை கடன், மகளிர் சுய உதவிக்குழு கடன்களை தள்ளுபடி செய்துள்ளார். இவ்வறாக இந்தியாவில் வேறு எந்த மாநிலங்களிலும் இல்லாத வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்.

மாரப்பநாயக்கன்பட்டி ஊராட்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.15.00 லட்சம் மதிப்பீட்டில் கீழ்நிலை நீர் தேக்க தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. சமூதாயக்கூடம் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அதே போன்று உயர்மின் கோபுர விளக்கு நாமக்கு நாமே திட்டத்தின் கீழ் செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வறாக மாரப்பநாயக்கன்பட்டி ஊராட்சிக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் நிறைவேற்றப்படும் என கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.சிவக்குமார், மகளிர் திட்ட இயக்குநர் மா. பிரியா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) க.அசோக் குமார், உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கலைஞர் நூற்றாண்டு மற்றும் தீப ஒளி திருநாளை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட மகளிர் அணி சார்பாக மாவட்ட அமைப்பாளர் கீர்த்திகா தங்கபாண்டியன் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் மகளிர் அணியினருக்கு இனிப்பு புத்தாடை மற்றும் பரிசுகள் வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் தங்கபாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் கழகத்தினர் மகளிர் அணியினர் உள்ளனர்

மேல்மலையனூர் ஒன்றியம் – கடலி ஊராட்சியில் ரூ.31.54 லட்சம் மதிப்பீட்டில்

# புதிதாக கட்டப்பட்ட ரேஷன் கடை,மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி!

## மக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்

விழுப்புரம், நவ.6-

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் கடலி ஊராட்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ 12.30 மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடையும்,ஜல்ஜீவன் மிஷன் சேமிப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ19.24லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த் தேக்கதொட்டி கட்டி முடிக்கப்பட்டு அதன் திறப்பு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார்.

ஊராட்சி மன்ற தலைவர் பெருமாள் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புதியதாக கட்டப்பட்ட நியாய விலைக் கடையும் மேல்நிலை நீர் தேக்க தொட்டியும் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். முன்னதாக கால்நடை துறை சார்பில் நடைபெற்ற இலவச கால்நடை சிகிச்சை முகாமை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து கால்நடைகளுக்குகோமாரி தடுப்பூசிகளை செலுத்திசிறப்பாக கிடாரி கன்றுகளை வளர்த்த கால்நடை உரிமையாளர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.



திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 1வது வட்டம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் புதிய வாக்காளர் சேர்ப்பு முகாமில் புதிய வாக்காளர் சேர்ப்பை தொகுதியின் சட்டமன்றபார்வையாளரும் மாநில இலக்கிய அணியின் துணைச் செயலாளருமான அ.திராவிடமணி பார்வையிட்டார். உடன் மேயர்என்.தினேஷ்குமார். பகுதிச்செயலாளர் இராமதாஸ், வட்டக்கழக செயலாளர் மகேந்திரன் மற்றும் BLA2 BLC.உறுப்பினர்கள் உள்ளனர்



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையின் சார்பாக சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொளிக் காட்சி வாயிலாக அனைத்து மாவட்டங்களிலும் "நடப்போம் நலம் பெறுவோம்" திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து மதுரை ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் நடைபெற்ற "நடப்போம் – நலம் பெறுவோம் திட்டம் நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பத்திரப்பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் பங்கேற்றார்கள். உடன் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகர காவல் ஆணையர், மாநகராட்சி ஆணையாளர், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்டோர் உள்ளனர்.

### கடலூரில் வெள்ளிக் கடற்கரையில்

# ‘நடப்போம் நலம்பெறுவோம்’ நடைப்பயிற்சி!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - சி.வெ.கணேசன் பங்கேற்பு!

கடலூர், நவ.6-

‘நடப்போம் நலம்பெறுவோம்” நடைப்பயிற்சியை அமைச்சர் பெருமக்கள் துவக்கிவைத்தனர். (04.11.2023) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், முன்னிலையில் கடலூர், தேவனாம்பட்டினம் வெள்ளி கடற்கரையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் வாயிலாக ‘நடப்போம் நலம்பெறுவோம்” நடைபயிற்சியை துவக்கிவைத்து பங்கேற்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, 4.11.2023 அன்று சுமார் 8 கிலோமீட்டர் தூரமுள்ள கடலூர் வெள்ளிக் கடற்கரை முதல் மஞ்சை மைதானம் வழியாக மீண்டும் வெள்ளிக் கடற்கரையில் வந்தடையும் நடைபயிற்சிதுவக்கிவைக்கப்பட்டு நடைபயில்வோர் சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு நடைப்பயிற்சி மேற்கொண்டனர். தொடர்ந்து இந்த நடைப்பயிற்சியானது மஞ்சை மைதானம் முதல் வெள்ளிக் கடற்கரை வழியாக மீண்டும் மஞ்சை மைதானத்தை வந்தடையும் வகையில் சுமார் 8 கிலோமீட்டர் அளவில் ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற உள்ளது.

இந்நடைப்பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள நடைப்பாதை நெடுகிலும் பொதுமக்கள் நலம் கருதி உயர் இரத்த அழுத்தம் மற்றும் சக்கரை நோய் அளவினை தெரிந்துகொள்ளும் வகையில்இலவசபரிசோதனை மையங்கள், ஆம்புலன்ஸ் வசதிகள், இளைப்பாற இருக்கைகள், குடிநீர் வசதிகள், நடைப்பயிற்சிக் குறித்த விழிப்புணர்வு பதாகைகள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் போன்ற நடைப்பயிற்சி மேற்கொள்பவர்களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில், விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் பல்வேறு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

உலக சுகாதார அமைப்பின் தரவுகளின் படி உடற்பயிற்சி செய்வது நீரிழிவு மற்றும் உயர்இரத்தஅழுத்த நோய்களின் தாக்கத்தை 28 சதவீதமும், இதயநோய் தாக்கத்தை 30 சதவீதமும் குறைக்கிறது என்பதை கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிற்கிணங்க பொதுமக்கள் நலன் கருதி இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், நடைப்பயிற்சியானது மக்கள் சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமான எடையுடன் இருக்கவும் நாள்பட்ட உடல் பிரச்சனைகள் மற்றும் மன அழுத்தத்தை குறைக்கவும் உதவுகிறது. எனவே, பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி உடல் நலத்தினை பேணி காத்திட கேட்டுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், கடலூர் மாநகர மேயர் திருமதி.சுந்தரிராஜா அவர்கள், மாநகர துணைமேயர் பா.தாமரை, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், சுகாதாரத் துறை, வருவாய்த் துறை, காவல் துறை, பொதுப்பணித் துறை, தோட்டக்கலைத் துறை, வனத்துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் நெடுஞ்சாலைத் துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள், நடைப்பயில்வோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



நெல்லை மாவட்டம் வள்ளியூர் புதிய பேருந்து நிலையத்தில், கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கலைஞர் அவர்களின் முத்தமிழ் தேர் வந்ததையொட்டி கலைஞர் முத்தமிழ் தேரினை சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு வரவேற்று கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல்,துணை செயலாளர் நம்பி,ஒன்றிய செயலாளர்கள் ஜோசப்பெல்சி, ஜெகதீஷ்,ஆரோக்கிய எட்வின், வள்ளியூர் ஒன்றிய குழு தலைவர் சேவியர் செல்வராஜா, நகர செயலாளர் சேது ராமலிங்கம்,பேரூராட்சி தலைவர் ராதா,வட்டாட்சியர் இசக்கி பாண்டியன் உள்பட கழகத்தினர் மற்றும் மாணவ,மாணவியர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### சிவகங்கை மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணி!

## அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தொடங்கி வைத்தார்!

சிவகங்கை.நவ.6-

சிவகங்கை மாவட்ட கழக அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ. கணேசன் தலைமையில் இலக்கிய அணிபுரவலர் மு.தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் த. சேங்கை மாறன் வரவேற்றுப்பேசினார். மாவட்ட துணைச்செயலாளர் கே.எஸ்.எம். மணிமுத்து வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்து விளக்கிப் பேசினார். செயற்குழு கூட்டத்தில் அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன்பேசியதாவது.

வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகள் இம்மாதம் ஞாயிற்றுக்கிழமை வாக்குச்சாவடி களின் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது. எனவே இந்த முகாம்களில் ஒன்றிய, நகர, பேருர் செயலாளர்கள் மாவட்ட நிர்வாகிகள் பாக முகவர்களுடன் இணைந்து புதிதாக வாக்காளர்களை சேர்த்தல், நீக்குதல், தொடர்பான பணிகளை தீவிரமாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணியில் கழகத்தினர் தீவிரமாக பணியற்றுமாறு உத்தரவிட்டுள்ளார். அவர் வேண்டுகோளை ஏற்று நமது மாவட்டத்தில் உள்ள நிர்வாகிகள் அனைவரும் வாக்காளர் பட்டியல் திருத்த பணியில் ஈடுபடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். 2024 பாராளுமன்ற தேர்தலில் கழக தலைவர் முதல் வர் தளபதி அவர்கள் வேண்டுகோளின் படி தமிழகத்தில் 40 தொகுதிகளும் வெற்றி பெற வேண்டும். இந்தியா கூட்டணி ஆட்சி தலைநகரில் அமைய வேண்டும். இதற்கு கழகத் தொண்டர்கள் ஒவ்வொருவரும் தீவிரமாக பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன் நன்றி கூறினார். இந்த கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன்கென்னடி, செயற்குழு உறுப்பினர்கள் தா.ராமையா, எஸ்.முத்துதுரை பொதுக்குழு உறுப்பினர்கள் கரு.அசோகன், பி.டி.ஆர். முத்து பி.ஆர் . பெருமாள்,நகர்கழக செயலாளர்கள் துரைஆனந்த், க.பொன்னுச் சாமி, என். குணசேகரன், பெரி.பாலா, ஒன்றிய செயலாளர்கள் எஸ்.சண்முகவடிவேலு, விராமதிமாணிக்கம், கே. பாலசுப்பிரமணியன், பூமணி, எம்.ஜெயராமன், திருமலை முத்து ராமலிங்கம், வே.தமிழ்மாறன், கா.வெங்கட் ராமன்,ஆறு. செல்வராஜன், துரை.ராஜாமனி,

எம்.அண்ணா துரை, நாகனி ரவி, பூபால சிங்கம்,லெ.மு. ரவிச்சந்திரன், சுப.சின்னதுரை நா.நெடுஞ்செழியன், செல்வராஜ் , யோககிருஸ்ண குமார்,ஆர். எம்.கென்னடி, வே.ஆரோக்கியசாமி, பேருர்கழக செயலாளர்கள் கே .பி .எஸ். பழனியப்பன், அசோக், ஜெயராமன், நாகூர் கனி,கதிர்வேல், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், துணை அமைப்பாளர்கள் பரணி கிட்டு,மகாதீர், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானிகணேசன்,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர் சிங்கமுத்து, மகளீரணிநிர்வாகிகள் திலகவதி கண்ணன், மார்கரெட்கமலா,சண்முகப்ரியா, செல்வராணி, தெரஸா, விவசாய அணி அமைப்பாளர் எஸ்.எஸ். அருணாசலம், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், துணை தலைவர் கான் முகமது, நிர்வாகிகள் ராம். ரவி,கோடவுன்மணி, சிவபுரி சேகர், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குகுமார்,பொருளாளர் ஏ.எம். கண்ணன் திருநாவுக்கரசு ஷாஜகான், அண்ணாமலை, புதூர்கண்ணன், பேரூராட்சி மன்றத் தலைவர் நஜ்முதீன், தகவல் தொழில் நுட்ப அணி கண்ணன், புலிக்குட்டி , இளைஞரணி மனோகரன் நகர்மன்ற துணைத்தலை வர் எம்.கார்கண்ணன் தொ.மு.ச.சண்முகநாதன் உட்பட நிர்வாகி கள் கலந்து கொண்டார்கள்.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தலைமை! ம.சுப்பராயன் வரவேற்புரை!

# சீர்காழி நகர தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

## கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி.- அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

நாகை, நவ.6-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகரக் கழகம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக் கூட்டம் சீர்காழி பழைய பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது. பொதுக் கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன் வரவேற்றார். ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், செல்லசேதுரவிக்குமார், பஞ்சு.குமார், மலர்விழிதிருமாவளவன், வைத்தீஸ்வரன்கோயில் பேரூர் செயலாளர் எம்.அன்புச்செழியன், ஒன்றியக் குழு தலைவர்கள் சீர்காழி கமலஜோதிதேவேந்திரன், கொள்ளிடம் வி.ஜெய பிரகாஷ், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரிராஜசேகர், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் இரா.காழி கலைவாணன், நகரக் கழக அவைத்தலைவர் ஏ.குகன், துணைச் செயலாளர்கள் ஆர்.எம்.முத்து, ஏ.மகாராஜான், சிவப்பிரியாதுரை, பொருளாளர் சி.சங்கர், மாவட்ட பிரதிநிதி ஏ.பி.எஸ்.பாஸ்கர், நகர இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஆர்.ஆர்.ராஜசேகரன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் இரா.தன்ராஜ், மாவட்ட பொறியாளர் அணி தலைவர் ஆர்.ஆர்.ரஜேஷ், மாவட்ட சுற்றுசூழல்அணி துணை அமைப்பாளர் எஸ்.வி.ஆர்.திருச்செல்வம், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ஏ.இளையராஜா, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் வி.ஆர்.டி.முத்துகுமார், தகவல் தொழில் நுட்ப அணி பி.ஆர்.ஸ்ரீராம், மாவட்ட சுற்றுசூழல் அணி தலைவர் எம். பாரூக், முன்னாள் நகர பொருளாளர் எஸ்.துரை, முன்னாள் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.ஆர். ஆர்.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி., சுற்றுசூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், பெரம்பலூர் சட்ட மன்ற உறுப்பினர் பிரபாகர், மாநில சட்ட திருத்தக் குழு உறுப்பினர் சுபாசந்திரசேகர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், மாநில மாணவர்அணி துணைச் செயலாளர், சீர்காழி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மன்னை த.சோழராஜன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள் செல்வம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, இராம. இளங்கோவன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞான வேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல ஒருங்கிணைப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.இளையபொருமாள், மூவலூர் எம்.மூர்த்தி, மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், பி.முருகமணி, ஞான. இமையநாதன், பி.எம். அன்பழகன், எம்.அப்துல் மாலிக், அமுர்தவிஜயகுமார், ஏ.ஆர்.ராஜா, சீர்காழி கிழக்கு முன்னாள் ஒன்றியச் செயலாளர் என்.சசிக்குமார், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ்.கே.முத்துராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.சுவாமிநாதன், பி.சிவதாஸ், எஸ்.கென்னடி, நத்தம் வின்சென்ட், சுபாநெடுஞ்செழியன், அர்சத், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், தங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணா சங்கரிகுமரவேல், குத்தாலம் ஒன்றியக் குழு தலைவர் எம்.மகேந்திரன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் விஜயபாரதி கென்னடி, தியாக.விஜயேஸ்வரன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, காளிதேசப்பன், எம்.எஸ். முத்துகுபேரன், இரா. முருகன், இரா.மனோகரன், ஆர்.சாந்தி, தீபா.சத்தியேந்திரன், வி.எஸ்.பிரபாகரன், நிர்வாகிகள் மா.வைத்தியநாதன், எம்.பெரியசாமி, ஆர்.நாகராஜன், எஸ்.கே. ராஜா, இளவரசன், ஆர். அருள், எஸ்.சிவா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜுபையர்அகமது, சௌ.சர்வோதயன், மற்றும் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், நகர்மன்ற உறுப்பினர்கள்.

வார்டுகழகநிர்வாககிள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் இராம.செல்வமுத்துக்குமார் நன்றி கூறினார்.

# நேபாளம் நிலநடுக்கம்: பலி எண்ணிக்கை 157ஆக உயர்வு!

காட்மண்ட், நவ.6-

நேபாளத்தின் வட மேற்கு மாவட்டங்களில் நேற்று நள்ளிரவு ஏற்பட்ட கடும் நிலநடுக்கத்தில் 157 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இநநிலையில், பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க புவியியல் மையம், நிலடுக்கம் முதற்கட்ட அளவில் 5.6 ரிக்டர் பதிவானதாகவும், 11 மைல் ஆழத்தில் ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளது. அதன் பின் 6.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தின் நில நடுக்கம் கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சி தேசிய மையம், நேபாளம் தலைநகர் காத்மாண்டில் இருந்து 250 மைல் தூரத்தில் உள்ள ஜாஜர்கோட், நிலநடுக்கத்தின் மையப்புள்ளியாக இருந்தது எனத் தெரிவித்துள்ளது.

ருகும் மாவட்டத்தில் குறைந்தது 35 பேர் உயிரிழந்துள்ளனர். ஏராளமான வீடுகள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன. காயம் அடைந்த 30க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஜாகர் கோட் மாவட்டத்தில் 34 பேர் உயிரிழந்ததை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. மின்சாரம் இல்லாததால் மீட்புப் பணியில தடை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், பல இடங்களில நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதால்0 பாதிக்கப்பட்ட இடத்தை நெருங்க முடியவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் நேபாளத்தில் 89 பெண்கள் உள்பட 157 பேர் உயிரிழந்துள்ளனர். பலி எண்ணிக்கை உயர்ந்துள்ள நிலையில் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், 190 பேர் படுகாயமடைந்துள்ளனர். மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியத்தில்

# மாற்றுக் கட்சியினர் தி.மு.க.வில் இணைந்தனர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலை!

நாமக்கல், நவ.6-

நாமக்கல் மேற்கு மாவட்டம் பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம் ஒன்றிய கழக செயலாளர் இளங்கோவன் ஏற்பாட்டில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் முன்னிலையில் பாப்பம்பாளையம் அதிமுக கிளை செயலாளர் ரமேஷ் தலைமையில் மணிவண்ணன், திலகவதி, லட்சுமணன், பிரகாஷ் மூர்த்தி, தீபக், பழனியப்பன், சரவணன், ஜியாவுல்லா, குணால், தேவிகா, சாவின், வார்டு உறுப்பினர்கள் ஸ்ரீதர் சரவணன் உள்ளிட்ட 100 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக செயலாளர் எஸ். எம்.மதுரா செந்தில் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ரமேஷ், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் குமார், விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் முருகேசன், ஜான்சன், வின்சன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஒன்றியம், கடலி ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்ட நியாய விலைக் கடையை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன் உள்ளனர்.

### 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலில்

# பா.ஜ.க.வுக்கு தோல்வி உறுதி!

## காங்கிரஸ் நிர்வாகிகள் பேட்டி!

டெல்லி, நவ.6-

ராஜஸ்தான், சத்தீஸ்கர் உள்ளிட்ட 5 மாநிலங்களில் பாஜகவுக்கு தோல்வி உறுதியாகிவிட்டது என்று காங்கிரஸ் கட்சி உறுதிபட தெரிவித்துள்ளது.

காங்கிரஸ் கட்சியின் மூத்த நிர்வாகிகளான ஜெய்ராம் ரமேஷ், கே.சி.வேணுகோபால், அபிஷேக் சிங்வி உள்ளிட்டோர் டெல்லியில் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது பேசிய அவர்கள், கர்நாடகாவில் தேர்தலுக்கு முன்னதாக, நூற்றுக்கும் மேலான காங்கிரஸ் கட்சியினர் வீடுகளில் ஒன்றிய அரசின் அமைப்புகள் மூலம் பல்வேறு சோதனைகள் நடத்தப்பட்டது என்று தெரிவித்தனர். 6 மாதங்களாகிவிட்டது, இந்த சோதனைகளின் நிலை என்ன? என்று கேள்வி எழுப்பினர். அதுபோல்தான் இப்போது காங்கிரஸ் ஆளும் ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநிலங்களைக் குறிவைத்து அமலாக்கத்துறையை பா.ஜ.க., ஏவி விடுகிறது என்று அவர்கள் குற்றம்சாட்டினர்.

சத்தீஷ்கர் மாநில முதலமைச்சரை களங்கப்படுத்தும் விதமாக அமலாக்கத்துறை அறிக்கை வெளியிட் டுள்ளது என்று தெரிவித்த அவர்கள், காங்கிரஸ் கட்சி, மக்கள் நீதி மன்றத்தில் அனைத்தையும் முன்வைத்து வெற்றிபெறும் என்று திட்டவட்டமாக தெரிவித்தனர். 5 மாநில தேர்தலில் பா.ஜ.க.வுக்கு தோல்வி உறுதி என்றும் அவர் குறிப்பிட்டனர்.



சேலம் மாநகரில் உள்ள வாக்குசாவடி முகாமில் வாக்காளர்கள் சேர்க்கும் ஜான் ஜன் பேட்டை காமராஜர் பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர். இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார். உடன் பகுதிச் செயலாளரும். மேயருமான ஏ. ராமச்சந்திரன். மாநகரச் செயலாளர். பா ரகுபதி. சங்கீத நீதிவர்மன் எம்.சி. கோட்டச் செயலாளர். தலைமை செயற்குழு உறுப்பினர் கே.டி.மணி மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.



நெல்லை பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு கவியரங்கம் மற்றும் கவிதை போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் விழாவில் கவிதை போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர்கள் பெரியகருப்பன், கயல்விழி செல்வராஜ் ஆகியோர் முதல் பரிசு பெற்ற பத்ம பாரதிக்கு ரூபாய் 50,000,ம் மற்றும் சான்றிதழ்களை எழுத்தாளர் கலைக்குழு உறுப்பினர் செயலர், சமூக நலத்துறை ஆணையர் அமுதவல்லி, மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.மேயர் சரவணன், ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், துணை மேயர் ராஜ், மாவட்ட ஊராட்சி மன்றகுழு தலைவர் ஜெகதீஸ், கவியரங்க ஒருங்கிணைப்பாளர்கள் கலாப்ரியா, அறிவுமதி, சல்மா ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்கள்.



நெல்லை மாவட்டம் மணி மூர்த்தீஸ்வரம் பகுதியில் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு தாக்குதலுக்கு உள்ளான இளைஞர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் நேரில் சென்று பார்த்து ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் உள்ளார்.

### நெல்லை – பாளையங்கோட்டையில்

# கலைஞர் நூற்றாண்டு விழா கவியரங்கம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு - அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் - கயல்விழி செல்வராஜ் பங்கேற்பு!

நெல்லை, நவ. 6 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைகிணங்க முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நெல்லை பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் வைத்து கலைஞர் நூற்றாண்டு கவியரங்கம் மற்றும் கவிதை போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் விழா நிகழ்வு சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு தலைமையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப. கார்த்திகேயன் வரவேற்புரை ஆற்றினார்.

நெல்லை பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் கலைஞர் நூற்றாண்டு கவியரங்கம் மற்றும் கவிதை போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் விழாவில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழ் பாடும் கலைஞர் நூற்றாண்டு கவியரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.இந்த கவியரங்கம் கவிஞர் அறிவுமதி தலைமையில் கவிஞர்கள் கலாப்ரியா, சல்மா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கவிஞர்கள் தனிக்கொடி,சதீஷ்குமார் சங்கரன், எம்.வித்யா, நேசமித்திரன்,நெல்லை ஜெயந்தா,இளங்கோ கிருஷ்ணன், தஞ்சை இனியன்,ரோஸ்லின்,சுசித்ரா மாரன் ஆகியோர் கவி பாடினார்கள்.

அதனைத் தொடர்ந்து சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு,கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர்

கலைஞர் நூற்றாண்டு கவிதை போட்டியில் கவிஞர் பத்மபாரதிக்கு முதல் பரிசாக ரூபாய் 50,000ம் சான்றிதழும்,2 வது பரிசு கவிஞர் கவி திலகத்திற்கு ரூபாய் 30,000ம் சான்றிதழும், 3வது பரிசு அமிர்தம் சூர்யாவுக்கு ரூபாய் 20,000ம் சான்றிதழும்,ஆறுதல் பரிசாக 10 கவிஞர்களுக்கு தலா ரூபாய் 2500ம் சான்றிதழுயும் வழங்கினார்கள்.

பின்னர் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசியதாவது:

தமிழ்நாட்டிற்கு செம்மொழியை தந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.தமிழுக்கு ஒப்பிலக்கணம் தந்த பிஷப் கார்டுவெல் இல்லத்தினை அரசு இல்லமாக அறிவித்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். உலகத்திலேயே நாகரிகம் தோன்றிய இடம் நெல்லை பொருநை நதிகரை தான். அதனை போற்றும் வகையில் முதலமைச்சர் அவர்கள் ரூபாய். 33.02 கோடியில் மதிப்பில் ரெட்டியார்பட்டி மழை அடிவாரத்தில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் உட்பட எழுத்தாளர்கள் படைத்த படைப்புகள் எல்லாம் அரசு உடைமையாக்கி பாராட்டுகிறார்கள். எழுத்தாளர்களுக்கு வீடுகள் இல்லை என்றால் வீடுகள் கட்டிக் கொடுத்து எழுத்தாளர்களை பாதுகாக்கின்ற அரசாக முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு திகழ்ந்து வருகிறது.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.

அதன்பின்னர் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேசியதாவது.

தமிழ் மொழிக்கு வாழ்வு தந்து தமிழ் மொழியை தலை சிறக்க வைத்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, அனைத்து தரப்பு மக்களுக்கும் ஒரு நிலையான பங்களிப்பை தர வேண்டும் என்ற நோக்கத்தோடு நடத்தப்பட வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 12 குழுக்கள் அமைக்கப்பட்டன."எழுத்தாளர்கலைஞர் "குழு படைப்புலகின் முடி சூடா மன்னராகத் திகழ்ந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும் பணிகள், அவரது பரிமாணங்களை போற்றும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை செயல்படுத்தி வருகிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 5 முறை முதலமைச்சராக இருந்து தமிழ்நாட்டிற்கு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்டோர் மக்கள், பொருளாதாரத்தை உயர்த்தியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டிற்கு முன்மாதிரியாக திட்டங்களை கொண்டு வந்து இந்தியாவிற்கே வழிகாட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.ஒரு மாநிலத்தின் கட்சிக்கு தான் கலைஞர் தலைவர் என்றாலும் அகில இந்திய தலைவர்கள் அவரது வாய் அசைவை எதிர்பார்த்து இருப்பார்கள்.தமிழக மட்டுமல்லாது இந்திய நாட்டுக்கே பாதுகாப்பாக இருந்து ஜனநாயகத்தை பாதுகாத்தவர் கலைஞர் அவர்கள். அவர்கள் வழியில் 6,வதாக செயல்பட்டு வரும் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை வளர்ச்சி பாதைக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் அழைத்துச் செல்கிறார்கள். எழுத்தாளர் குழுவின் சார்பில் இன்று நடைபெறும் கலைஞர் நூற்றாண்டு நிகழ்ச்சியை சிறப்பாக நடத்திய குழுவிற்கு நன்றி.

இந்தியாவில் பல மொழிகள் இருந்தாலும் மலேசியா,சிங்கப்பூர், உள்ளிட்ட பல நாடுகளில் தமிழ் ஆட்சி மொழியாக உள்ளது.இதற்கு கலைஞர் அவர்களின் பேனா தான் காரணம். கலைஞர் நூற்றாண்டு கவியரங்கம் மற்றும் எழுத்தாளர்கள் குழுவில் என்னை இடம் பெறும் செய்த முதலமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கலைஞருக்காக எதையும் செய்ய தயாராக இருக்கிறோம்.

இங்கு கூடியிருக்கின்ற மாணவர்களை பார்க்கும் போது லட்சக்கணக்கான கலைஞர்கள் உருவாகுவார்கள்.முதலமைச்சர் அவர்களின் முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் பெரியகருப்பன் பேசினார்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் பெரியகருப்பன் முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் என்று சொல்ல அனைவரும் ஒன்றாக கலைஞர் புகழ் ஓங்குக என்று பலமாக கோஷமிட்டு ஆரவாரத்தில் கரவொலியை எழுப்பினார்கள்.

நிகழ்வில் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் பேசியதாவது.

தமிழுக்கு பெருமை சேர்த்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்களுடைய எழுத்துக்கள் சமூக நீதிக்காகவும்,ஒதுக்கப்பட்ட மக்கள் வாழ்க்கையில் உயர்வதற்காகவும்,அவர் எழுதிய எழுத்துக்கள் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. செம்மொழி மாநாட்டை கொண்டு வந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்த பெருமை கலைஞர் அவர்களை சேரும்.8 லட்சத்திற்கு மேல் எழுத்துக்கள் எழுதிய ஒரே தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்களுடைய கையெழுத்து சட்டங்களையும்,பல்வேறு திட்டங்களையும் தமிழ் நாட்டிற்கு கொண்டு வந்து நம்மை மகிழ்ச்சி அடைய வைத்துள்ளது.தமிழகம் முன்னேற்றம் அடைந்துள்ளது.முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை போற்றும் விதமாக கலைஞர் நூற்றாண்டு விழாவை அறிவித்துள்ள முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கயல்விழி செல்வராஜ் பேசினார்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான்,மு. அப்துல்வகாப் எம்.எல்.ஏ. மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன் ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், துணை மேயர் கே.ஆர். ராஜு, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் வி.எஸ். ஆர். ஜெகதீஸ்,மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சுரேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ். லெட்சுமணன்,சித்திக், மாவட்ட துணை செயலாளர் நம்பி, ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனகராஜ், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி,உள்பட எழுத்தாளர்கள்,கவிஞர்கள்,மாணவ, மாணவியர்கள்,பொதுமக்கள், கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் எழுத்தாளர் கலைஞர் குழு உறுப்பினர் செயலர், சமூக நலத்துறை ஆணையர் வே. அமுதவல்லி நன்றியுரையாற்றினார்.

முன்னதாக பாளையங்கோட்டை அரசு சுற்றுலா மாளிகையில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மரக்கன்றுகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, அமைச்சர்கள் பெரியகப்பன்,கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நட்டு வைத்தனர்.



தமிழ்நாடு முதல்வரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற நடப்போம் நலம் பெறுவோம் சுகாதார நடைபாதை Health Walk திட்டத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் தலைமையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சரும் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள் சென்னையில் காணொலி வாயிலாக தொடங்கி வைத்ததை தொடர்ந்து, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டி.பாஸ்கர் பாண்டியன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு நடைபயிற்சியை தொடங்கி வைத்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து அச்சமங்கலம் வரை நடைபயிற்சி மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட துணைச் செயலாளர் ஆ.சம்பத்குமார், திருப்பத்தூர் நகர மன்ற தலைவர் சங்கிதாவெங்கடேசன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் செ.வெங்கடேசன் மற்றும் அரசு துறை அதிகாரிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், தன்னார்வலர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

### பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில்

# திருவாரூரில் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்!

## முனைவர் கோ.வி.செழியன் - பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ.பங்கேற்பு!

திருவாரூர், நவ. 6 -

திருவாரூர் மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு "சட்டமன்ற நாயகர் கலைஞர்" எனும் கருத்தரங்கம் சட்டமன்ற பேரவைத்தலைவர் மு.அப்பாவு அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அரசு தலைமை கொறடா முனைவர்.கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சித்தலைவர் தஜி.பாலு ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் தொடர்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிகழ்ச்சிகளை நடத்துவதற்கென தமிழக அரசால் 12 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அக்குழுக்களில் ஒன்றான சட்டமன்ற நாயகர் கலைஞர் என்ற குழு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்களின் தலைமையில் முன்னாள் பேரவைத் தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பள்ளிகள் கல்லூரிகளில் (ஒரு மாவட்டத்திற்கு 3 பள்ளிகள் மற்றும் 3 கல்லூரிகள் என்ற வகையில்) நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது என்ற தலைப்பின் கீழ் கருத்தரங்கினை நடத்துவதென குழு தீர்மானித்துள்ளது. அந்த அடிப்படையில் இதற்கென நான்கு துணைக் குழுக்களும் பேரவைத் தலைவர் அவர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக திருவாரூரில் நடைபெற்ற கருத்தரங்கில் சட்டமன்ற பேரவைத்தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்க்கையானது மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டு மக்களுக்கு நலன்பயக்கும் திட்டங்களையே தீட்டி செயல்படுத்தியுள்ளார்கள்.

"சட்டமன்ற நாயகர் கலைஞர்" கருத்தரங்கில் கல்லூரி மாணவ, மாணவியர்கள் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பற்றி பேசியது வியந்து பாராட்டுக்கூடியதாக அமைந்தது. தற்பொழுது எனக்கு வருத்தம் பெரும்பாலான பெண்கள் கல்வி பயில்வதை காண பெரியாரோ, அறிஞர் அண்ணாவோ இல்லை என்பதே. அன்றைய காலகட்டத்தில் பெண்கல்வி என்பது எளிதாக கிடைத்ததன்று. பல்வேறு போராட்டங்களுக்கு பிறகே கிடைத்தது. முத்தமிழறிஞர் கலைஞர் ஆணுக்கு, பெண் நிகர் என பெண்களுக்கும் சொத்தில் பங்கு உண்டு என கொண்டுவந்தார்கள். தற்பொழுது பெண்கல்வியினை ஊக்குவிக்கும் விதமாக முதலமைச்சர் அவர்கள் அரசு பள்ளிகளில் படித்து உயர் கல்விக்கு செல்லும் பெண்களுக்கு புதுமை பெண் திட்டத்தின் கீழ் உதவித்தொகை வழங்கி வருகிறார்கள்.

பெங்களூரில் மட்டுமே தகவல் தொழில்நுட்ப சார்ந்த தொழில்கள் இருந்த நிலையில் தமிழ்நாட்டில் அதேபோன்று சென்னையில்தகவல் தொழில்நுட்ப சார்ந்த தொழில்களையும், சிறுசேரியில் தகவல் தொழில் நுட்ப பூங்கா வினையும் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு கொண்டு வந்தார்கள். அது மட்டுமின்றி, ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளில் மட்டுமே மென்பொருள்கள் இருந்த நிலையினை மாற்றி தமிழ் மொழியில் மென்பொருளினை வடிவமைத்து வெளியிட குழு அமைத்து தமிழில் மென்பொருள் வெளியிட்ட பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே சார்ந்தது. தகவல் தொழில் நுட்பத்தில் பெருமளவில் தமிழர்கள் அதிகளவில் பணியாற்றுவதற்கும். தமிழகத்தில் மென்பொருள் வளர்ச்சிக்கும் காரணமும் அவரே. முதலமைச்சர் அவர்கள் தற்பொழுது இந்த தொழில்நுட்ப படிப்பினை பல ஆயிரம் மாணவ, மாணவியர்கள் படிப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளார்கள். இந்த அரசு சாமானியர்களின் அரசு. அதுமட்டுமின்றி பெண்களின் நிலையறிந்து அவர்களின் அன்றாட பணிகளையும் நினைத்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகர பேருந்துகளில் கட்டணமில்லா இலவச பேருந்து வசதியினை அறிமுகப்படுத்தியதால் நாள் ஒன்றுக்கு 50 லட்சம் பெண்கள் பயணிக்கின்றனர்.

மேலும், வசதியில்லாமல்; ஆதரவற்ற முதியோர்களுக் கும், வீட்டை விட்டு வெளிவரமுடியாத நோயாளிகளை கண்டறிந்து அவர்களுக்கு மக்களை தேடி மருத்துவம் என்ற திட்டத்தினையும் வழங்கியுள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். மக்களை தேடி மருத்துவம் திட்டத் தின் கீழ் தற்பொழுது 47 லட்சம் குடும்பங்கள் பயனடைந்து வருகின்றனர். மேலும், தாய்மார்களின் பொருளாதார நிலைமையினை அறிந்து 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பெண்களை வெளிப்படைத் தன்மையாக தேர்ந்தெடுத்து கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் கீழ் அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கி வருகிறார் முதலமைச்சர் அவர்கள். பள்ளி கல்வியுடன் மதிய உணவுத் திட்டத்தினையும் வழங்கியவர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள். இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியதால் 37000 அரசு ஆரம்ப பள்ளிகளில் 17 லட்சம் மாணவ, மாணவியர்கள் பயனடைந்து வருகின்றனர்.

ஏழை எளிய மக்களின் துயர் நிலையினை புரிந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை மேற்கொள்வதற்கு முதலமைச்சரின் காப்பீட்டு திட்டத்தினை அறிமுகப்படுத்தினார். இது போன்ற பற்பல திட்டங்களை ஏழை, எளிய மக்களுக்கு வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத்தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அரசு தலைமை கொறடா கோவி. செழியன் தெரிவித்ததாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பணிகள், உரைகள் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கிடையே சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் வந்தோம். ஆனால் இக்கருத்தரங்கில் பங்கேற்ற பள்ளி மாணவ, மாணவியர்கள் நாங்கள் பேச வந்த அனைத்தையும் அருமையாக பேசி விட்டார்கள். இதனுடைய விளைவு இன்றைக்கு இருக்கின்ற இளம் பிள்ளைகள் நாளைய தினம் திராவிட சிந்தனை யோடும், மொழி உணர்வோடும் சமூகத்திற்கு பணியாற்றுகின்ற நல்லப் பணியை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்து கின்ற வாய்ப்பினை தந்த முதலமைச்சர் அவர்களுக்கு சட்டமன்ற நாயகர் கலைஞர் குழுவின் பிரதிநிதி என்ற வகையில் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் இனத்துக்காக அர்ப்பணித்தவர், அனைவரும் உள்ளத்திலும் வாழும் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. சாதாரண ஏழை, எளிய விவசாய குடும்பத்தில் பிறந்த என்னைப் போன்றவர்கள் கல்வி பயின்று முன்னேறியுள்ளோம் என்றால் அதற்கு மிக முக்கிய காரணமாக ஒரே தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார். மேலும் பெண்களுக்கு சொத்துரிமை, இட ஒதுக்கீடு அனைவரும் சமம் என்ற வகையில் பல திட்டங்ளை திட்டியவர். ஒரே வகையில் கல்வி பயில சமச்சீர் கல்வி, எட்டாம் வரை படித்த பெண்களுக்கு திருமண உதவித்தொகை, மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித்திட்டங்களை கொண்டு வந்து முதலமைச்சர் அவர்கள் ஆட்சி செய்கின்ற தமிழ்நாட்டை கல்வியில் சிறந்த மாநிலமாக மாற்றிய பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே சேரும் என அரசு தலைமை கொறடா முனைவர்.கோ. வி.செழியன் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பயின்ற பள்ளியில், பயின்ற வகுப்பறையினை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத்தலைவர் மு.அப்பாவு, அரசு தலைமை கொறடா முனைவர். கோ.வி.செழியன் அவர்கள் பார்வையிட்டு மாணவ, மாணவியர்களிடம் கலந்துரையாடினார்.

இக்கருத்தரங்கில் பங்கேற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு பங்கேற்பு சான்றிதழ்களையும், முதல், மூன்று இடங்களைப் பிடித்த மாணவ, மாணவியர்களுக்கு பாரட்டு சான்றிதழ்களையும் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத்தலைவர் மு.அப்பாவு வழங்கினார்.

மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் சேகர் கலிய பெருமாள், நகர்மன்றத்தலைவர் புவனப்பிரியா செந்தில், நகர்மன்ற உறுப்பினர்கள் டி.செந்தில், வாரை எஸ்.பிரகாஷ், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், கல்லூரி முதல்வர் திருமதி.அகிலா, சட்டப்பேரவை துணை செயலாளர் ரவிச்சந்திரன், சட்டமன்ற இணை செயலாளர் ஜெய்கணேஷ், சட்டப்பேரவை தலைமை நிருபர் வரதராஜன், மாவட்ட கல்வி அலுவலர் மாதவன், வ.சோ. பள்ளி தலைமையாசிரியர் தியாகராஜன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் உத்தமபாளையம் பைபாஸ் சந்திப்பில் தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு சார்பில் நீட் எதிர்ப்பு கையெழுத்து இயக்கத்தை தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் பாளையம் பேரூர் செயலாளர் பேரூராட்சி தலைவர் எஸ்.எம்.எஸ்.காசிம், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் தக்காளி அக்கீம் தலைவர் லாரன்ஸ் துணைத் தலைவர் முகமது, ரஜப் துணை அமைப்பாளர்கள், செல்வராஜ். ஜெகநாதன், முகமது அபூபக்கர், சின்னப்பர் அபூபக்கர், சிட்டி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர்கள் பங்கேற்பு! கன்னியாகுமரியில்

# கலைஞர் நூற்றாண்டு முத்தமிழ் தேர் அலங்கார ஊர்தி!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்!

குமரி, நவ.6-

கலைஞர் நூற்றாண்டு முத்தமிழ்த்தேரினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் முரசு கொட்டி துவக்கி வைத்தார்.

முத்தமிழறிஞர், உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் லைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு எழுத்தாளர் கலைஞர் குழுவின் சார்பில் அமைக்கப்பட்ட முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தியினை நேற்று (04.11.2023) கன்னியாகுமரி, காந்திமண்டபம் அருகில் உள்ள முக்கோணப் பூங்காவில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஸ் பொய்யாமொழி, பால்வளத்துறை அமைச்சர் மனோதங்கராஜ், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர்முரசுகொட்டி துவக்கி வைத்தார்கள்.

முத்தமிழ்த்தேர் துவக்க நிகழ்ச்சியில் எழுத்தாளர் கலைஞர் குழுவின் தலைவரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் முரசு கொட்டி துவக்கி வைத்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, அனைத்து தரப்பு மக்களுக்கும் ஒரு நிலையான பங்களிப்பைத் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு நடத்தப்பட வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 12 குழுக்கள் அமைக்கப்பட்டன. அதில், “எழுத்தாளர் கலைஞர்” குழு, படைப்புலகின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களைப் போற்றும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில் இன்றைய இளம் தலைமுறையினருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத்தன்மையினை எடுத்து செல்லும் வகையில், எழுத்தாளர் - கலைஞர் குழுவின் மூலம் அவரது புகழ்பாடும் ”முத் தமிழ்த் தேர்” அலங்கார ஊர்தி தயார் செய்து துவக்கி வைக்கப்பட்டதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த வாகனமானது ”எழுத்தே எனது மூச்சு, எழுதுவதே எனது தினப்பழக்கம்” என்று முழங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பயன்படுத்திய பேனா வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் வெளிப்புறத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத்தன்மையினை விளக்கும் புகைப்படங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கலைஞர் அவர்களின் சிறப்புகளை விளக்கும் குறும்படமும் தொடர்ந்து திரையிடும் வகையில் ஒளித்திரையும் (LED WALL) அமைக்கப்பட்டுள்ளது.

பேனா வடிவிலான இந்த வாகனத்தின் பின்புறம் இயந்திரத்தினால் திறந்து மூடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலங்கார ஊர்தியினை பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட அனைவரும் சென்று பார்வையிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், வானத்தின் உள்ளே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோபாலபுர இல்ல உள் அமைப்பு தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது. உள்ளே அஞ்சுகம் அம்மாள் அவர்களில் உருவச்சிலையும் அதன் அருகில் முத்தமிழறிஞர் அவர்கள் இருக்கையில் அமர்ந்திருப்பது போன்ற உருவச்சிலையும், அவர் பயன்படுத்திய நூலகத்தின் மாதிரி வடிவமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் அருகில் நின்று பொதுமக்கள் Selfi எடுத்துக்கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எழுத்துக்களுக்கு வடிவம் கொடுக்கும் அவரது படைப்புகளும், அவரது பன்முகத் தோற்றத்தினை விளக்கும் ஒலி - ஒளி அமைப்பும் உருவக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கலைஞர் அவர்களின் எழுத்துகளால் உயிர்ப்பெற்ற கவிதை, கட்டுரை, புதினங்கள், காப்பியங்கள் போன்றவற்றை கைப்பேசி வாயிலாக இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் QR Code Scan செய்து அறிந்து கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாகனத்தின் பாதுகாப்பிற்காக நான்கு புறமும், உள்பகுதியிலும் சிசிடிவி கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது. மேலும், ஒட்டுநர் அறையில் வாகனத்தினை இயக்கும் போது நான்கு பக்கங்களும் தெரியும் வகையில் திரை அமைக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் (4.11.2023) துவக்கி வைக்கப்பட்ட இந்த அலங்கார ஊர்தியானது கன்னியாகுமரியில் முக்கோணப் பூங்கா பகுதியில் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள், சுற்றுலாப்பயணி கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் பார்வையிடும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து நாளைய தினம் திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் வழியாக 30 மாவட்டங்களுக்கு பயணம் மேற்கொண்டு 4.12.2023 அன்று சென்னை வந்தடையும். அப்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட வுள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

அதனைத்தொடர்ந்து அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கலைஞர் நூற்றாண்டு முத்தமிழ்த் தேரினை வடிவமைத்த கலை இயக்குநர் குழுவினர் மற்றும் முத்தமிழ்த்தேர் ஒட்டுநர்களுக்கு பொன்னாடை அணிவித்து பாராட்டு தெரிவித்ததோடு, எழுத்தாளர் கலைஞர் குழு உறுப்பினர்கள் ஆர்.பூரணலிங்கம், கலாபிரியா, ப.திருமாவே லன், இமையம், அறிவுமதி, வி.எம்.எஸ்.சுபகுணராஜன், கவிஞர். சல்மா, தமிழ்மகன், பொதியவெற்பன் ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.



நேற்று முன்தினம் (04.11.2023) கன்னியாகுமரி, காந்திமண்டபம் அருகில் உள்ள முக்கோணப்பூங்கா வில் நடைபெற்ற எழுத்தாளர் கலைஞர் குழுவின் சார்பில் அமைக்கப்பட்ட முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தி துவக்க விழாவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பால்வளத்துறை அமைச்சர் மனோதங்கராஜ், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அகியோர் முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தியினை துவக்கி வைத்து பார்வையிட்டார்கள். உடன், எழுத்தாளர் கலைஞர் குழு உறுப்பினர் செயலர் மற்றும் சமூகநலத்துறை ஆணையர் திருமதி.வே.அமுதவல்லி. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர், உட்பட பலர் உள்ளனர்.





கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு எழுத்தாளர் கலைஞர் குழுவின் சார்பில் அமைக்கப்பட்ட முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தியினை நேற்று முன்தினம் (04.11.2023) கன்னியாகுமரி, காந்திமண்டபம் அருகில் உள்ள முக்கோணப்பூங்காவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பால்வளத்துறை அமைச்சர் மனோதங்கராஜ், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வ ராஜ் அகியோர் முரசு கொட்டி துவக்கி வைத்தார்கள். உடன், எழுத்தாளர் கலைஞர் குழு உறுப்பினர் செயலர் மற்றும் சமூகநலத்துறை ஆணையர் திருமதி.வே.அமுதவல்லி, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.சி.விஜய தாரணி உட்பட பலர் உள்ளனர்.



திருவாரூர் மாவட்டம், குடவாசல் வடக்கு ஒன்றிய செயலாளர் ஜோதிராமனின் மகன் மருத்துவர் சூரியநாராயணன் – மருத்துவர் பவித்ரா இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி வடமட்டம் கிராமத்தில் நடைபெற்றது. இதில் கழக இளைஞரணிச் செயலாளரும் – இளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச் செயலாளர்கள் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ., நாகை கௌதமன், நிவேதா முருகன் எம்.எல்.ஏ., மணமக்களின் உறவினர்கள், கழக முன்னணியினர் உடன் உள்ளனர்.



# திராவிட மாடல் அரசு 42

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**



## வரையாடுகள் நலமே புலிகளின் நலம்!



இந்தியாவின் தேசிய விலங்கு புலி. தமிழ்நாட்டின் மாநில விலங்கு..? இப்படி ஒரு கேள்வியைக் கேட்டால் பலரும் யோசிப்பார்கள். காரணம், மாநில அரசுகளைக் கண்டுகொள்ளாத ஒன்றிய அரசு, மாநில விலங்குகளையும் கண்டுகொள்ளவில்லை என்பதே. இல்லையென்றால், இந்தியா சுதந்திரம் பெற்ற 76 ஆண்டுகளில் புலிகளுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தைப் போல நமது மாநில விலங்கான வரையாடுகளுக்கும் கொடுத்திருப்பார்கள்.

‘அது ஏன்? புலிகள் இருந்தால்தானே சுற்றுச் சூழலுக்கு நல்லது. அதனால், அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதில் என்ன தவறு’ என்று உங்களில் பலருக்குக் கேள்வி எழலாம். உண்மையில், புலிகள் போன்ற பெரிய விலங்குகள் எல்லாம் வரையாடு போன்ற சிறிய விலங்குகளைச் சார்ந்தே இருக்கின்றன. வரையாடுகள் எந்தப் பகுதியில் அதிகமாக இருக்கிறதோ, அங்குப் புலிகளும் அதிக எண்ணிக்கையில் இருக்கும். ஏனென்றால், புலிகள் போன்ற இரைக்கொல்லி விலங்குகளின் உணவுச் சங்கிலியில் வரையாடு போன்ற தாவர உண்ணிகள் மிகப் பெரிய பங்காற்றுகின்றன. அவை இல்லையென்றால், புலிகளுக்கு உணவு கிடைக்காது. உணவு கிடைக்காமல் போனால், புலிகள் இறக்கும். புலிகள் இறந்தால், காடுகள் அழியத் தொடங்கும். காடுகள் அழிந்தால் சூழல் கெடும். சூழல் கெட்டால் மனிதர்கள் அழிவர். அதனால்தான் வரையாடு போன்ற விலங்குகளுக்கும் போதுமான கவனம் தரப்பட வேண்டும் என்று சுற்றுச்சூழலியலாளர்களால் கோரிக்கை வைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் புலிகள் நல்ல எண்ணிக்கையில் இருந்து வருகின்றன. ஆனால், வரையாடுகளுக்குப் போதிய அளவு கவனம் இதுவரையில் வழங்கப்படவில்லை. இது தமிழ்நாட்டின் நிலை மட்டுமல்ல. நாட்டின் இதர மாநிலங்களில் உள்ள மாநில விலங்கினங்களுக்கும் இதுதான் கதி. இந்நிலையில், கல்வி, சுகாதாரம் போல தங்களுடைய மாநில விலங்குகளைப் பாதுகாக்க, இதிலும் மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது தமிழ்நாடு. அதன் வெளிப்பாடுதான், நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான **‘நீலகிரி வரையாடு திட்டம்’** கொண்டு வரப் பட்டுள்ளது.

### குறையும் இடமும் எண்ணிக்கையும்

தமிழில் **‘வரை’** என்ற சொல்லுக்கு **‘மலை’** என்ற ஒரு பொருள் உண்டு. உயிரின வகைப்பாட்டியல் (டாக்ஸானமி) அடிப்படையில், இது ஆட்டினத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளது. **‘மலையில் வாழ்கின்ற ஆடு’** என்கிற பொருளில் இதற்கு வரையாடு என்று பெயர் வழங்கப்படுகிறது. இது ஓர் ஓரிடவாழ்வி (எண்டமிக்). அதாவது, ஒரு நிலப்பரப்பில், குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே காணப்படும் ஓர் உயிரினம். அவற்றை உலகில் வேறெங்கும் காண இயலாது. தமிழ்நாட்டில் நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தில் (நீலகிரி பயோஸ்பியர் ரிசர்வ்) இந்த விலங்கு அதிக அளவில் தென்படுகிறது. ‘சீவக சிந்தாமணி’ உள்ளிட்ட காப்பியங்கள் மற்றும் இதர சங்க இலக்கியங்களில் நீலகிரி வரையாடு பற்றிய பல குறிப்புகள் உள்ளன.

ஒரு காலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் பெரும்பகுதியில் வாழ்ந்ததாக அறியப்பட்ட இந்த விலங்கு, இன்று தமிழ்நாடு மற்றும் கேரளாவில் ஒருசில வாழ்விடப் பகுதிகளுக்குள் சுருங்கிவிட்டது. நீலகிரிப் பகுதியில் அதிக அளவில் இவை தென்பட்டாலும், சிறுவாணி மலைப் பகுதி, பழனி மலைப் பகுதி, ஸ்ரீவில்லிப்புத்தூர், தேனி, திருநெல்வேலி மலைப் பகுதிகளிலும் இவை தென்படுகின்றன. கேரளத்தில் ‘ஹை ரேஞ்ச்’ எனப்படும், மூணாறு மலைப் பகுதியில், குறிப்பாக ‘எரவிக்குளம் தேசிய பூங்கா’வில் இவை அதிகமுள்ளன.

நீலகிரி வரையாடுகளுக்கு, **‘ஷோலா கிராஸ்லேண்ட்ஸ்’** எனப்படும் சோலைப் புல்வெளிகள்தான் வாழ்விடம். இந்த வகை நிலப்பகுதி, கடந்த சில பத்தாண்டுகளில் பருவநிலை மாற்றம், காட்டுத்தீ, அந்நிய இன தாவர ஆக்கிரமிப்பு போன்ற பல்வேறு இயற்கை மற்றும் மனிதக் காரணங்களால், குறைந்துகொண்டே வருகிறது. அதனால், நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. இன்று அது ‘இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேசச் சங்கத்தால்’, அழிந்து வரும் மலை இன விலங்காக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### வரையாடு மூலம் சூழல் சுற்றுலா

இப்படி ஓர் அற்புதமான உயிரினத்தைக் காக்கும் பொருட்டு, கழக அரசு, நீலகிரி வரையாடு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை, பரவல் மற்றும் சூழலியல் பற்றிய சிறந்த புரிதலை மேம்படுத்துதல், **‘ரேடியோ காலரிங்’** போன்ற தொழில் நுட்பங்கள் மூலம் அவற்றின் வாழ்க்கை முறைகள், வாழ்விடப் பயன்பாடு மற்றும் நடத்தை ஆகியவற்றைப் புரிந்துகொள்ள ஆய்வுகள் மேற்கொள்ளுதல், நீலகிரி வரையாடுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள சூழலியல் சார்ந்த அச்சுறுத்தலை நிவர்த்திச் செய்தல், சில வரையாடுகளுக்குத் தோன்றும் உடல்நல பாதிப்புகளுக்குச் சிகிச்சை அளித்தல் உள்ளிட்ட இலக்குகளின் அடிப்படையில், இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது.

நீலகிரி வரையாடுகள் குறித்து, பொதுமக்களிடையே முதன்முதலில் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் டாக்டர் ஈ.ஆர்.சி.தாவீதார் எனும் பிரபல இயற்கை ஆர்வலர். இவர், ‘நீலகிரி காட்டுயிர் மற்றும் சுற்றுச்சூழல் சங்க’த்தின் கௌரவக் கண்காணிப்பாளராக இருந்தார். மேலும் நீலகிரி வரையாடு பற்றிய முதல் கணக்கெடுப்பை நடத்திய முன்னோடியும் இவர்தான். எனவே, இவரது பிறந்த நாளான அக்டோபர் 7-ஆம் தேதி, ‘நீலகிரி வரையாடு நாள்’ என்று கொண்டாடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கான அலுவலகம் கோவையில் செயல்படுகிறது. இந்தத் திட்டத்தில் மூத்த விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வனத்துறை களப்பணியாளர்கள் ஆகியோர் உள்ளனர். உலகத்தில் வேறு எங்கும் தென்படாத நமது மாநில விலங்கைப் பாதுகாப்பதன் மூலம், சுற்றுச்சூழல் சுற்றுலாவையும் அறிமுகப்படுத்த உள்ளது நமது அரசு. இதனால், சுற்றுலா வருவாய் அதிகரிப்பதுடன், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் நீலகிரி வரையாடு குறித்த விழிப்புணர்வும் அதிகரிக்கும்.

விலங்குகளை ‘மனிதர்க்குத் தோழனடி’ என்று போற்றியவர்கள் நாம். எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சி எனும் தத்துவத்தில் இயங்கும் ‘திராவிட மாடல் அரசு’, அந்தத் தோழர்களையும் அரவணைத்துச் செல்வதில் ஆச்சரியம் ஏதும் இல்லையே..!

**...சாதனை தொடரும்**

### மணிவிழாவில் மலையினம்!



ஒரு பகுதியில் உள்ள குறிப்பிட்ட விலங்குகள் எவ்வளவு இருக்கின்றன என்று கணக்கிடப்படுவது சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதில் உள்ள மிகவும் அடிப்படையான பணி ஆகும். விலங்குகளின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கிறது என்பது தெரிந்தால்தான், அவற்றின் உயிரினத் தொகை உயர்ந்திருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்பதை அறிய முடியும். அதற்கேற்றபடி திட்டங்களைத் தீட்டவும் முடியும். அதனால், குறிப்பிட்ட கால இடைவெளிகளில் காட்டுயிர் கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நீலகிரி வரையாடு தொடர்பான முதல் கணக்கெடுப்பு 1963-இல், தாவீதாரால் மேற்கொள்ளப்பட்டது. அந்தக் கணக்கெடுப்பு குறித்து அவர் எழுதிய கட்டுரை ஒன்று, **‘பாம்பே இயற்கை வரலாற்றுக் கழகம்’** வெளியிடும் இதழில் வெளியாகி, உலக அளவில் பிரபலமான உயிரியலாளர் ஜார்ஜ் ஷேலர் என்பவரின் கவனத்தை ஈர்த்தது. ஜார்ஜ் ஷேலர்தான் முதன்முதலில் ஆப்பிரிக்கச் சிங்கம், கொரில்லா, இந்தியப் புலிகள் போன்ற பல காட்டுயிர்கள் குறித்து கணக்கெடுப்பு நடத்தியவர். இன்றும் அமெரிக்காவில் தொடர்ந்து இயங்கி வருகிறார். தாவீதாரின் கட்டுரையால் ஈர்க்கப்பட்ட அவர், நீலகிரி மாவட்டம், குன்னூரில் இருந்த தாவீதாரின் வீட்டுக்கு வந்து தங்கியிருந்து, வரையாடு குறித்த விரிவான கணக்கெடுப்பு நடத்த தாவீதாருக்கு உதவினார். அந்த விரிவான கணக்கெடுப்பு 1975-இல் மேற்கொள்ளப்பட்டது. அப்போது மாநிலம் முழுவதும் இருந்த வரையாடுகளின் எண்ணிக்கை 2,200.

தாவீதாரின் காலத்துக்குப் பின்னர் 2011-இல் நடத்தப்பட்ட ஆய்வில், 1,500 எண்ணிக்கையில் வரையாடுகள் இருந்தன. 2015-இல் **‘உலக இயற்கை நிதியம்’** (WWF) அமைப்பின் மூலம் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் 3,122 வரையாடுகள் இருப்பதாகத் தெரியவந்துள்ளன. அதுதான் கடைசியாக நடத்தப்பட்ட ஆய்வு. இந்நிலையில், முதல் கணக்கெடுப்பு நடந்த 60-வது ஆண்டில், **‘நீலகிரி வரையாடு திட்ட’**த்தைக் கொண்டுவந்துள்ள நம் கழக அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அடுத்த ஆண்டு மார்ச் மாதம், வரையாடுகள் தொடர்பான புதிய கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட உள்ளது.

---

### கலைஞர் எழுத்துகளுக்கு ஓர் ஆவணம்



உலக அளவில் எந்த அரசியல்வாதியும் முத்தமிழறிஞர் கலைஞரைப் போல இலக்கியவாதியாக, நாடகாசிரியராக, திரைக்கதையாசிரியராக, பாடலாசிரியராக, வசனகர்த்தாவாக எனப் பன்முக ஆற்றலுடன் இயங்கியதில்லை என்பதை தமிழ்நாடு அறியும். அவர் எழுதியவற்றைத் திரும்பிப் பார்க்க, வாசிக்க வைக்கும் வகையில், சமீபத்தில் வெளியாகி இருக்கிறது **‘என்றும் இறவா எழுத்துக்காரர் கலைஞர்’** எனும் நூல். கலைஞரின் கையெழுத்துடன் வடிவமைக்கப்பட்ட அழகான அட்டைப்படமே ஈர்க்கும் வகையில் உள்ளது.

கலைஞர் இதுவரை எழுதிய அனைத்து நூல்களின் அட்டைப்படங்களை மட்டும் வைத்து, கலைஞர் எழுத்துக்குப் புகழ்மாலை சூட்டி இருக்கிறார் இந்த நூலின் தொகுப்பாசிரியர் எழுத்தாளர் இமையம். “இந்தியாவில் இதுவரை எந்த எழுத்தாளருடைய நூல்களின் அட்டைப்படங்களும் ஒரு தொகுப்பாக வந்ததில்லை. இந்த நூலின் மூலம், கலைஞரின் நூல்களைத் தேடிப் படிப்பதற்கு ஆர்வத்தை உருவாக்க முடியும் என்பதே என் ஆசை” என்கிறார் இமையம். இந்த நூலை தொழிலாளர் நலத்துறை மற்றும் திறன்மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் வெளியிட்டுள்ளார். வழவழப்பான தாளில், வண்ணப்படங்களுடன் கலைஞர் எழுத்துகளுக்கு ஆவணம் இந்த நூல்.

### ஃப்ளாஷ்பேக்



**மாறுவேட சுற்றுப்பயணம்!**

1940 களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கோவை மாவட்டம், சிங்காநல்லூரில் இயக்கப் பணிகளையும் சினிமா திரைக்கதைகளையும் எழுதிவந்த காலத்தில் அவருக்கு உற்றநண்பராக இருந்தவர், என் மாமனார் அண்ணாசாமி. 1993-ஆம் ஆண்டு உடல்நலக் குறைவால் அவர் மறைவெய்தினார். அப்போது தலைவர் கலைஞர் வேறு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த காரணத்தால் துக்கம் விசாரிக்க வர இயலவில்லை. சில தினங்களுக்குப் பிறகு கோவை வந்த தலைவர் கலைஞர் அவர்கள், சிங்காநல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் அண்ணாசாமி குடும்பத்தாரிடம் ஆறுதல் கூறினார். அந்நேரம் எடுக்கப்பட்ட நெஞ்சை விட்டு அகலாத புகைப்படம் இது.



அய்யாசாமி

**-கே.அய்யாசாமி, தில்லைநகர், கோவை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033– 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

**பாசறைக் கூட்டங்கள்**

**1944-ஆம் ஆண்டு ஏப்ரல் 16, 17 தேதிகளில், ஈரோட்டில் திராவிட மாணவர்களின் முதலாவது பயிற்சி முகாம் நடைபெற்றது. பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் மாணவர்களிடையே, அறிஞர் அண்ணா பேசத் தொடங்கிய கால கட்டங்களில் இருந்து ‘பயிற்சி முகாம்கள்’, ‘பாசறைக் கூட்டங்கள்’, ‘பயிற்சி வகுப்புகள்’ நடைபெறத் தொடங்கின. கழகம் உருவான பின்னர், மதுரை அய்யம்பாளையத்தில் நாவலர் பொறுப்பேற்று நடத்திய பாசறைக் கூட்டம் ஏழு நாட்கள் நடைபெற்றது.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 292




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.